விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 06 வெள்ளிக்கிழமை (23.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

# ஜெனிவா அறிக்கை விவாதம்
# செங்கோலுடன் பறந்த எம்.பி
# தொடர்ந்து கடும் அமளி

(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் தொடர்பான ஜெனிவா அறிக்கையின் மீது நேற்று நடைபெற்ற நாடாளு மன்ற விவாதத்தின் போது தினேஷ் குணவர்த்தன செங்கோலைத் தூக்கிச் சென்றதால் கடும் அமளி ஏற்பட்டது.**

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஜெனிவா அறிக்கை மீது நேற்று நாடாளுமன்றத்தில் விவாதம் ஆரம்பமானது.

ஆளுந்தரப்பில் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் மகிந்த சமரசிங்க விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றினார்.

அவரது உரை முடிந்தவுடன் சபைக்குத் தலைமை வகித்த முஜிபுர் ரஹ்மான், அடுத்து உரையாற்ற மீள்குடியேற்ற அமைச்சர் டீ.எம். சுவாமிநாதனை அழைத்தார்.

24ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா அறிக்கைக்கு சர்வஜன வாக்கெடுப்பு

### விமல் வீரவன்ச ஆலோசனை



(கொழும்பு)

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்து இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியங்களை பெற்றுக் கொள்ள அரசு முயற்சிப்பதாக

24ஆம் பக்கம் பார்க்க

## எழுத்துமூல யோசனை வழங்க ஜனாதிபதி கோரிக்கை!

### ஐ.நா தீர்மானம் குறித்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானம் குறித்து எழுத்துமூல யோசனைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கட்சிகளிடம் கோரியுள்ளார்.

இரண்டு வார காலத்திற்குள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட

24ஆம் பக்கம் பார்க்க

## ஜப்பான் பிரதிநிதி பிரதமருடன் பேச்சு

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியாக இலங்கை வந்துள்ள மொட்டோ நொகுச், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட அலுவலகத்தின் பிரதிநிதியான

23ஆம் பக்கம் பார்க்க

## சனல் 4 ஆவணப்படம் குறித்து அறிக்கையில் கூறவில்லை

### பரணகம தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் உள்ளடக்கப்பட்ட சனல் 4 ஆவணப்படம் உண்மையானதென தனது அறிக்கையில் குறிப்பிடப்பட வில்லை என காணாமல் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைகுழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

சனல் 4 ஊடகத்தின் ஆவணப்படம் உண்மையானது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பி.பி.சி செய்தி சேவை வெளியிட்டிருந்தது.

எனினும், அவ்வாறான ஓர் விடயத்தை தனது அறிக்கையில்

23ஆம் பக்கம் பார்க்க

## பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை பாரதூரமானவை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தையும் தாண்டி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த மக்ஸ்வெல் பரண

24ஆம் பக்கம் பார்க்க

## வெடிகுண்டு மீட்பு!

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் தெற்கு பகுதியில் தோட்டக்காணியில் இருந்து 2 கவச எதிர்ப்பு கண்ணி வெடிகளும் மேலும் சில கண்ணிவெடிகளும் நேற்று விசேட அதிரடி படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர் தோட்ட வேலையில் ஈடுபடும் போது கண்ணி

23ஆம் பக்கம் பார்க்க

# வெளிநாட்டு நிபுணர் பங்கேற்பு அரசியலமைப்பை மீறும் செயல்

# முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளில் வெளிநாட்டு நிபுணர்களை ஈடுபடுத்துவது இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயல் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவ இலங்கை வந்திருந்த ஜப்பானிய நீதிபதியும், போர்க்குற்ற விவகாரங்கள தொடர்பான நிபுணருமான மோட்டூ நுகுசியிடமே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள, உள்ளக விசாரணை தொடர்பான முயற்சிகளுக்கு உதவுவதற்காக இலங்கை வந்திருந்த, ஜப்பானிய நீதிபதி மோட்டூ நுகுசி, ஜப்பான் திரும்ப முன்னர் நேற்று முன்தினம் காலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

நீண்டநேரம் நடந்த இந்தச் சந்திப்பில், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசும் கலந்து கொண்டார். இதன் போது கம்போடி

24ஆம் பக்கம் பார்க்க

## ஏற்றுமதி வருவாயில் 3.4 சதவீத வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 7 ஆயிரத்து

23ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா விசாரணை அறிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது!

### ஐ.நா மனித உரிமை ஆணையாளர்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான தமது பணியகத்தின் விசாரணை அறிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் சயிட் ராட அல் ஹுசேன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொதுச்சபையின் 70 ஆவது கூட்டத் தொடரின் 3ஆவது குழுக்கூட்டத்தில்ஐ.நாமனித உரிமை ஆணையாளர் பணியகத்தின், 2014 ஓகஸ்ட் தொடக்கம் 2015 ஜூலை வரையிலான செயற்பாடுகள் குறித்த அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர்

24ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகள் எவரும் கிடையாது

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் கிடையாது என அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் துரித கதியில் தண்டிக்கப்படுவர் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளு

24ஆம் பக்கம் பார்க்க

## சிங்கள இராஜ்ஜியம் வந்தால் தமிழீழ இராஜ்ஜியம் உருவாகும்

### மாவை எம்.பி முழக்கம்

(கொழும்பு)

இலங்கையில் சிங்கள இராஜ்ஜியத்தை ஏற்படுத்த முயற்சித்தால் அது, சர்வதேச ஆதரவுடன் தமிழீழ இராஜ்ஜியத்தை உருவாக்க வழி வகுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், ஐ.நா. அறிக்கை எமக்கு முழுமையாக நம்பிக்கை தராவிட்டாலும், கலப்பு மற்றும் உள்ளக விசாரணை என வலியுறுத்தப்பட்டுள்ளமை ஆறுதலளிக்கின்றது

24ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் தேங்கும் வீதி எப்போது புனரமைக்கப்படும்?

## பொதுமக்கள் கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி இரண்டாம் ஒழுங்கை பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதால் மழை காலத்தில் பொதுமக்கள் போக்குவரத்து மேற்கொள்ளவதில்பாரிய இன்னல்களுக்கு உள்ளாகின்றனர்.

குறித்த ஒழுங்கை 10 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்பட்டாமல் இருப்பதால் மழை காலத்தில் வெள்ளம் வழிந்தோடாமல் தேங்கி நிற்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், அலுவலக உத்தியோகஸ்தர்கள் என பலர் இவ் வீதியை பயன்படுத்தி வருகின்றனர். தற்போது மழை காலம் என்பதால் தினமும் பல சிரமங்களை அவர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு இந்த ஒழுங்கையை புனரமைக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

# செயற்றிறனற்ற வகையில் சட்டமா அதிபர் திணைக்களம்

## ரைட் லைப் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டமா அதிபர் பதவி விலக வேண்டுமென ரைட் லைப் என்ற மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் மிகவும் செயற்றிறனற்ற விதத்தில் இயங்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ இது குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்தின் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்றிறனற்ற வகையில் இயங்கி வருகிறது.

சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் பல தோல்வியடைந்து வருகிறது.

அரசியல்வாதிகள் தொடர்பிலான வழக்குகள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.

சட்டமா அதிபர் திணைக்களம் சிறந்த முறையில் செயற்பட்டால் குற்றவாளிகள் தண்டனை அனுபவிக்காது சமூகத்தில் இணைந்து கொள்ளும் நிலைமை ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன், அவன் கார்ட் போன்ற முக்கிய வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகள் குறித்து மக்களுக்கு போதியளவு தெளிவற்ற நிலைமை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

உள்ளக விசாரணைப் பொறிமுறைமை ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் உரியமுறையில் செயற்படாத நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளக விசாரணைப்பொறிமுறைமை குறித்து எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள் எனவும் அவர கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)

# 20 சட்டத்தரணிகளுடன் மகிந்த மந்திர ஆலோசனை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இரவு தனது மிரிஹான வீட்டிற்கு சுமார் 20 சட்டத்தரணிகளை அழைத்து கலந்துரையாடல் மேற் கொண்டுள்ளதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

தற்போதைய காலகட்டம் வரையில் ராஜபக்ஷ குடும்பத்தினர் மிகவும் அச்சத்திற்குள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் வீட்டில் கூடிய சட்டத்தரணிகள் அந்த இடத்தில் இரகசிய சந்திப்பு நடத்துவதற்கு தகுதியான சூழல் இல்லை என கூறி ராஜபக்ஷ குடும்பத்தினரின் உதவியுடன் சட்டத்தரணிகள் லொகான் ரத் வத்தவின் வீட்டுக்குச் சென்றனர்.

இதற்கிடையில் ஐக்கிய அரபு இராச்சியம் இலங்கைக்கு எச்சரிக்கை செய்தியினை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)


## தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு

**நாற்று உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட 40 வருடத்திற்கு மேலான தாய்த் தென்னைகளிலிருந்து பெறப்பட்ட விதை நாற்றுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தரமான தென்னை நாற்றுக்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.**

**நாற்றுக்களைப்பெற விரும்புபவர்கள் உடன் முற்பதிவுகளை மேற்கொண்டு எதிர்வரும் நவம்பர் 20ம் திகதிக்கு முன் எமது கிராஞ்சி தென்னந்தோட்டத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

**விலை ரூபா 120/=**

**முகவரி:-**
**தி.இராசநாயகம், தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொலைபேசி இலக்கங்கள் :**

**021-4923118, 077-0604950**
**077-2463027, 071-7494370**

(C-2527)


# பிரபா ஆயுதத்தை பயன்படுத்தினார் விமல் வார்த்தையை பயன்படுத்துகிறார்

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் படையணி மற்றும் ஆயுதங்களைக் கொண்டு நாட்டை பிளவுபடுத்த முயற்சித்தார், அதே காரியத்தை வார்த்தைகளின் ஊடாகவும் பிரசாரங்களின் ஊடாகவும் ஜே.என்.பி.யின் தலைவர் விமல் வீரவன்ச மேற்கொண்டு வருவதாக அமைச்சர் ஹரிசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் விஹாரமஹா தேவி பூங்காவில் விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்தன உள்ளிட்ட மகிந்த ஆதரவு தரப்பு கூட்டம் நடத்தி கலப்பு நீதிமன்றத்திற்கு எதிராக விமர்சனங்களை வெளியிட்டிருந்தன என அவர் தெரிவித்துள்ளார்.

கலப்பு என்ற வார்த்தையை உலகிற்கு தெளிவுபடுத்துவதே இந்த கூட்டத்தின் பிரதான இலக்காக அமைந்திருந்தது.

கலப்பு என்ற சொல்லுக்கு உலக விளக்கம் பெற்றுக்கொள்ள முன்னர் தனது மனைவி சசி வீரவன்சவின் கலப்பு அடையாளம் பற்றி விமல் வர்வன்ச தெரிந்துகொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியும் இணைந்து கொண்டன.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் தினேஸ் குணவர்தன போன்றவர்கள் என்ன காரணத்திற்காக ஒன்றிணைந்து கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என்பதன் தாற்பரியம் தமக்கு புரியவில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஊடக சுதந்திரம் காணப்பட்டதாகவும் தற்போது அவ்வாறு இல்லை எனவும் சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

சிரச தொலைக்காட்சி எரிக்கப்பட்டமை, சியத்த ஊடகம் தாக்கப்பட்டமை, பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டமை, லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் நடைபெற்றவை என அவர் தெரிவித்துள்ளார்.

தாஜுடீன் கொலை, லசந்த கொலை மற்றும் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் எவ்வாறான விசாரணை நடத்தப்படுகின்றது என்பது பற்றி மக்கள் கவனித்து வருகின்றார்கள், எனவே அரசாங்கம் துரித கதியில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# டெஸ்மன் சில்வா அறிக்கை இன்னமும் சமர்ப்பிக்கவில்லை

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

டெஸ்மன் சில்வா அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளில் டெஸ்மன் சில்வாவின் உதவி பெறப்பட்டதாக கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் அவ்வாறான அறிக்கை வெளியிடப்படவில்லை. டெஸ்மன் சில்வாவுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது அவர் கூறியதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவா யோசனை தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெற்று வரும் விவாதத்தில் பிரதமர் இதனை கூறியுள்ளார்.

ஜெனிவா யோசனை தொடர்பில் நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அதேவேளை தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்ப கடந்த அரசாங்கத்திடம் தான் யோசனை திட்டம் ஒன்றை முன்வைத்ததாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜெனிவா யோசனை தொடர்பான விவாதம் மாலை 6.30 வரை நடைபெற்றதுடன் இன்றைய தினமும் நடைபெறவுள்ளது. (எ-11)

# இந்தியா உண்மையை உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கலைஞர் கடிதம்



(சென்னை)

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட குழுவே, போர்க் குற்றம் நடந்ததாகக் கூறியிருக்கும் நிலையில், இந்திய அரசு உண்மையை உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின்போது நடந்த போர்க் குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட மக்ஸ்வல் பரனகம அறிக்கை இலங்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், இந்தக் கருத்தை கருணாநிதி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், இந்திய அரசு இலங்கையை இனியும் நட்பு நாடு என்று கூறாமல், இலங்கை ராணுவம் நடத்திய போர்க் குற்றம், இன அழிப்பு குறித்து நம்பகமான, சர்வதேச விசாரணையை நடத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டு மெனக் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த விசாரணையை இலங்கையில் வைத்து நடத்தாமல், பொதுவான ஒரு இடத்தில் வைத்து நடத்தினால்தான் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியும் என்றும் கருணாநிதி கூறியிருக்கிறார். (எ-11)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி கைது செய்யப்பட்ட புதுக்கோட்டை ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த 6 இந்திய மீனவர்களையும் 3 ஆவது முறையாக எதிர் வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி செ.லெனின்குமார் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி இரவு காரைநகர் வடக்கு கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

இவர்களை ஊர்காவற்றுறை நீதிவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்திய போது நீதவான் கடந்த ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

2 ஆவது முறையாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்றைய தினம் 3 ஆவது முறையாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி அரசாங்கம் தொடர்ந்து பழிவாங்குகின்றது

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தினால் தொடர்ந்து பழிவாங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பஸ்நாயக்க நிலமே மொஹான் பானபொக்கேயின் இறுதி சடங்கில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தான் அரசியலை விட்டு விலகுவதற்கு முன்னர் மக்கள் யாரை விலக்குகின்றார்கள் என கண்டுபிடியுங்கள் என்று அவர் தெரிவித்தார். அத்துடன் தற்போதைய அரசாங்கத்தின் பழிவாங்கும் நடவடிக்கை தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார.(இ-7-10)


## வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
## Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Slipped disk), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), மூட்டுத்தேய்மான வாதம் (Osteoarthritis), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251 (2033)


# இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்


## ஐ.நா. பிரதிப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**போருடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பான பொறுப்புக்கூறலுக்கு ஐ.நா தொடர்ந்து, அழுத்தம் கொடுக்கும் என்று, ஐ.நா.பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.**

நியூயோர்க்கில்நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இலங்கை பயணம் மேற்கொண்டுள்ள, அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா உதவிச் செயலர் மீரோஸ்லாவ் ஜெனகா, பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார. நிச்சயமாக நாம்எப்போதும், பொறுப்புக்கூறலுக்கு அழைப்பு விடுத்து வந்துள்ளோம். தொடர்ந்தும் அதற்கு அழுத்தம் கொடுப்போம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## தம்புள்ளையில் பூமிக்குள் புதையுண்டுபோன கிணறு



(கொழும்பு)

தம்புள்ளையை அண்மித்த நாவுல, பிபில பிரதேசத்தில் 40 அடி ஆழத்தில் தோண்டப்பட்டு, பயன்பாட்டில் இருந்த கிணறு ஒன்று திடீரென்று சுமார் 20 அடி வரை பூமிக்குள் புதையுண்டு போன சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக பெய்து வரும் கடும் மழை காரணமாகவே தனது தோட்டத்தில் அமைந்திருந்த கிணறு பூமிக்குள் புதையுண்டு போயுள்ளதாக அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பாக நாவுல பிரதேச செயலாளர் ஊடாக கட்டட நிர்மாண ஆய்வு நிலையத்திற்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## மகிந்தவும் சந்திரிகாவும் சந்தித்தும் பேசவில்லை

கண்டி ஸ்ரீவிஷ்ணு தேவாலய பஸ்நாயக்க நிலமேயாக செயற்பட்ட மொஹான பானபொக்கவின் இறுதிச் சடங்கில், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க கலந்து கொண்டனர்.

பஸ்நாயக்க நிலமேயின் உடல் கண்டி வீரகோன் காட்ன் மைதானத்தில் நேறறு முன்தினம் அடக்கம் செய்யப்பட்டது.

இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் அங்கு வந்திருந்த மக்களுடன் கலந்துரையாடினர். எனினும் அவர்கள் இருவருக்கும் இடையில் எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

## வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக நான்கு லீசிங் நிறுவனங்கள் வழக்கு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன மற்றும் அவரது மனைவிக்கு எதிராக நான்கு லீசிங் நிறுவனங்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

கொழும்பு வர்த்தக நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சஜின் மற்றும் அவரது மனைவி ஆகியோர்ரிடமிருந்து 737696044 ரூபா நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவித்து வழக்குத் தொடரப்பட்டுள்ளது. சஜின் வாஸ் குணவர்தன, அவரது மனைவி மற்றும் மனைவி கடமையாற்றி வரும் நிறுவனமொன்றின் பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கொழும்பு வர்த்தக நீதிமன றில் இரண்டு வழக்குகளும் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இரண்டு வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகுமாறு குறித்த நபர்களுக்கு அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## யானை தாக்கி ஆசிரியர் பலி

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நைனாகாடுப் பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை காலை யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கருவாக்கல் பகுதியைச் சேர்ந்த கலந்தர்லெப்பை முஹம்மத்தம்பி முஹம்மத் இர்பான் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் இறக்காமம், வரிப்பத்தாஞ்சேனையிலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்பிக்கின்றார்.

நைனாகாடு பள்ளக்காடு பகுதியிலுள்ள தனது வயலுக்குச் சென்றபோதே, இவர் யானையின் தாக்குதலுக்கு உள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7-10)

# பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்ற அழைப்பாணை

## பொலிஸ் சட்டப்பிரிவின் பணிப்பாளர் நீக்கம்

பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்ட விவகாரம் தொடர்பில் பொலிஸ் சட்டப்பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு ள்ளார்.

பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனுக்கு கடந்த 9ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைபபாணை அனுப்பி யிருந்தது.

எனினும் அவர் அக்காலப்பகுதியில் வெளிநாட்டு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

**இதன் காரணமாக கடந்த** 16ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸ்மா அதிபருக்கு மீண்டும் அழைபபாணை அனுப்பப்பட்டது.

பொலிஸ்மா அதிபருக்கு முதல் தடவை நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்ட சமயத்தில் பொலிஸ் சட்டப் பிரிவின் பணிப்பாளர் நீதிமன்றத்தில் ஆஜராகி, பொலிஸ்மா அதிபரின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் தெரிவித்திருந்தால், இரண்டாவது தடவை அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருக்காது.

**எனினும் சட்டப்பிரிவின்** பணிப்பாளர் உட்பட அதன் அதிகாரிகள் அசமந்த போக்கில் செயற்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே பொலிஸ்மா அதிபருக்கு இரண்டாம் தடவையாகவும் நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதற்குப் பதிலடியாக பொலிஸ் சட்டப்பிரிவின் பணிப்பாளருடைய பதவி நேற்று பறிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பிரிவின் ஏனைய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.(இ-7-10)

# ஊடகச்செய்திகளுக்கு பேச்சாளரே பொறுப்பு

துனேஸ்பிரியசாந்த எனப்படும் கொண்டயா தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு பொலிஸ் ஊடகப்பேச்ளாளரே பொறுப்பு என கம்பஹா நீதவான் டிக்கிரி கே. ஜயதிலக தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் வீடு ஒன்றில் புகுந்து நபர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்தியதாக கொண்டயா மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணைகளின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

**பொலிஸாரினால் கைது** செய்யப்படும் எந்தவொரு நபரும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரையில் சந்தேக நபராகவே கருதப்படுகின்றார்.

சாட்சி கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் வழக்கு விசாரணை நடத்தப்படுகின்றது. சந்தேக நபர் ஒருவரை குற்றவாளியாக அடையாளப்படுத்த பொலிஸாருக்கு அதிகாரமில்லை.

ஊடகவியலாளர்களுக்கு செய்திகளை அறிக்கையிட உரிமையுண்டு.

**சந்தேக நபர் தொடர்பில் ஊடகங்களில் பிரசுரமான** செய்திகளுக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளரே பொறுப்பு சொல்ல வேண்டும் என நீதவான் தெரிவித்துள்ளார்.

கொண்டயா தொடர்பில் கம்பஹா நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கு ஒன்றுக்கு விசாரணை நடத்தப்பட்டபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

கொண்டயாவிற்கு நேற்று முன்தினம் பிணை வழங்கப்பட்ட போதிலும், பிணையில் எடுக்க எவரும் முன்வாரத காரணத்தினால் விளக்க மறியல் நீடிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணானது டி வில்லியர்ஸின் அபார சதம் தெ.ஆபிரிக்காவை வென்றது இந்தியா



தென்னாபிரிக்க அணிக்கு எதிராக சேப்பாக்கத்தில் நடந்த நான்காவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தனி ஒருவனாக போராடிய தென்னாபிரிக்க அணித்தலைவர் டி வில்லியர்ஸ் சதம் வீணானது.

இந்தியா வந்துள்ள தென்னாபிரிக்க அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1:2 என, தொடரில் பின் தங்கியிருந்தது.

நேற்று நான்காவது போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் தோனி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. தென்னாபிரிக்க அணியில் காயமடைந்த டுமினி, மோர்கலுக்குப் பதிலாக கிறிஸ் மோரிஸ், பங்கிசோ சேர்க்கப்பட்டனர்.

இந்திய அணியின் ரோகித் சர்மா 21 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். ஷிகர் தவான் (7) வழக்கம் போல ஏமாற்றினார். ரகானே (45) நீடிக்கவில்லை. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹோலி 23-வது சதம் அடித்தார். இவர் 138 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ரெய்னா (53) அரை சதம் விளாசினார், தோனி 15 ஓட்டங்கள் எடுத்தார். ஹர்பஜன் சிங், புவனேஷ்வர் டக்-அவுட்டாகினர். இந்திய அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 299 ஓட்டங்கள் எடுத்தது. அக்சர் (4) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கடின இலக்கை துரத்திய தென்னாபிரிக்க அணிக்கு, தொடக்க வீரர் அம்லா (7), டு பிளசி (17) ஆகியோர் ஏமாற்றினர்.

அடுத்து வந்த மில்லர் (6), பெகர்டீன் (22), கிறிஸ் மோரிஸ் (22) ஆகியார் இந்திய சுழலில் அடுத்தடுத்து வெளியேறினர்.


குயிண்டன் (43) அரைசதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் தனிஒருவனாக போராடிய டி வில்லியர்ஸ் ஒருநாள் அரங்கில் தனது 22-வது சதத்தை பூர்த்தி செய்தார்.

இவர் 112 ஓட்டங்கள் எடுத்த போது இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமாரின் சுப்பர் பவுன்ஸரில் ஆட்டமிழக்க, பின் வரிசை வீரர்கள் தட்டுத்தடுமாறினர்.

இதனால் தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 264 ஓட்டங்கள் எடுத்து 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் விராட் ஹோலி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரை இந்திய அணி 2:2 என தற்போது சமன் செய்தது.

இரு அணிகள் மோதும் ஐந்தாவது மற்றும் கடைசி போட்டி வரும் 25-ம் திகதி மும்பையில் நடக்கிறது. (க)



## மிஸ்பா சதம்

# பாகிஸ்தான் ஆதிக்கம்

அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக்கின் ஸ்திரமான சதம் கைகொடுக்க நேற்றைய முதல் நாள் ஆட்டம் பாகிஸ்தான் வசமாகியது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு பாகிஸ்தான் அணியுடன் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது.


அபுதாபியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் போதிய வெளிச்சமின்மையால் வெற்றியை இங்கிலாந்து அணி பறிகொடுத்திருந்தது.

இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி நேற்று டுபாயில் ஆரம்பமானது.

கடந்த போட்டியில் காயம் காரணமாக ஆடாத யாசீர்ஷா இப்போட்டியில் பங்குபற்றுகிறார்.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி நேற்றைய முதல் ஆட்ட நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களை எடுத்து பலமான நிலையில் உள்ளது.

கடந்த போட்டியில் அபாரமாக ஆடிய ஆரம்ப வீரர் மொஹமட் ஹபிஸ், சொகைப் மலிக் ஆகிய இருவரும் இப்போட்டியில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி முறையே 19, 02 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.



முதல் டெஸ்டில் அண்டர்சனின் வேகத்தில் தடுமாறிய ஆரம்ப வீரர் ஷான் மசூட் இப்போட்டியில் திறமையாக துடுப்பெடுத்தாடி 58 ஓட்டங்களை எடுத்திருந்த போது மதிய உணவு இடைவேளையின் பின் அண்டர்சனால் வீசப்பட்ட முதல் பந்தில் ஜோஸ் பட்லரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இத்தொடரில் இவர் அண்டர்சனின் வேகத்தில் ஆட்டமிழக்கும் 3ஆவதும் சந்தர்ப்பமாக அமைந்தது.

இதன்பின்னர் ஜோடி சேர்ந்த மூத்த அனுபவ வீரர்களான யூனிஸ் – மிஸ்பா இணை 4ஆவது விக்கெட்டுக்காக சிறந்த பங்களிப்பை வழங்கி அணியை ஸ்திரப்படுத்தியது.

இந்நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 178 ஐ எட்டிய போது யூனிஸ் கான் 56 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

யூனிஸின் வெளியேற்றத்தை தொடர்ந்து களமிறங்கிய சபீக், அணித் தலைவர் மிஸ்பாவுக்கு ஒத்துழைப்பு கொடுக்க மிஸ்பா டெஸ்ட் அரங்கில் 9ஆவது சதத்தை பூர்த்தி செய்தார்.

இவ்வாறு இருவரும் சிறப்பான ஆட்டத்தை தொடர நேற்றைய முதல்நாள் நிறைவில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் மிஸ்பா 102, சபீக் 46 ஓட்டங்களுடன் உள்ளனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் அண்டர்சன், அலி, வூட், ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# கரீபியனுக்கு எதிரான டெஸ்ட் இலங்கை அணி தடுமாற்றம்

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டியில் இலங்கை 200 ஓட்டங்களுக்குள் தடு மாறி ஆட்ட மிழந்தது.



இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 2 இருபது-20 போட்டிகளில் விளையாடுகிறது.

முதலில் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. காலி சர்வதேச அரங்கில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 6 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.

இதனால், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 1:0 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், 2-வது டெஸ்ட் கொழும்பு பி.எஸ்.ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

இந்த போட்டியில் இலங்கையின் அறிமுக வீரராக குசால் மெண்டிஸ் களமிறங்கினர். அதேபோல், தரிந்து கௌஷலுக்கு பதிலாக டில்ருவான் பெரேரா களமிறங்கினார்.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் மத்யூஸ், முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தார்.

இதனை தொடர்ந்து, இலங்கை அணியின் திமுத் கருணரத்ன, கவுஷல் சில்வா இருவரும் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினர்.

போட்டி தொடங்கியதுமே இலங்கை அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. இதில் சில்வா தான் சந்தித்த முதல் பந்திலேயே டெய்லரின் பந்துவீச்சில் டக்அவுட் ஆகி வெளியேறினார்.

இதனையடுத்து நிதானமாக விளையாடி வந்த கருணரத்னே மற்றும் மெண்டிஸ் அடுத்தடுத்து தலா 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அரங்கு திரும்பினர்.

இலங்கை அணி 66 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

நேற்றைய நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் 5.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை இழந்து 17 ஓட்டங்களை பெற்றுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பை மறுசீரமைப்பதற்கு உகந்த அரசியல் சூழல் உருவாகியுள்ளது

## ஜயம்பதி விக்கிரமரட்ன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பை மறுசீரமைப்பதற்குரிய உகந்த அரசியல் சூழ்நிலை தற்போது உருவாகி யுள்ளமையால் காலத்தை வீணடிக்காமல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் ஆரம் பிக்க வேண்டுமென ஜனாதிபதியின் சட்ட ஆலோ சகர் டாக்டர் ஜயம்பதி விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார். காலம், அரசியல் சூழ் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

தற்போது நிலவும் உறவுகள் பிளவடையலாம் அல்லது புது உறவுகள் உருவாகலாம்.

எதுவாக இருப்பினும் அர சிய லமைப்பு மறுசீரமை ப்புக்கு சாதகமாக அமை யுமா? என்பது சந்தேகம் என் பதனால் தற்போதுள்ள அரசி யல் சூழ்நிலையை தவறவிட்டு விடக்கூடாது என்றும் அவர் வலி யுறுத்தினார்.

இதேவேளை 1972 மற்றும் 1978ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றது போல் எதிர் வரும் அரசியல மைப்பு மறுசீரமைப்பிலும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத் தும் தமிழர்களின் கருத்துக்கள் உள்வாங்கப் படாவிடத்து அது அர்த்த மற்றதாகி விடுமெனவும் அவர் சுட் டிக்காட்டினார்.

லேக்ஹவுஸ் நிறுவன த்தில் நேற்று முன்தினம் நடந்த ஊடகவிய லாளர்களு டனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட கருத்துக் களை முன்வை த்தார். லேக்ஹ வுஸ் பயிற்சி பிரிவு இதனை ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ் தேசியக் கூட்டமை ப்பின் தலைவர் ஆர். சம்பந் தன், அரசியலமைப்பினை மறு சீரமைப்பது குறித்து மிகு ந்த ஆர்வமாக உள் ளார். என்ற போதும் எதிர்கா லத்தில் முன்னெ டுக்கப்படவி ருக்கும் அரசியல மைப்பு மறுசீரமைப்பில் தமிழ் எம்.பிக்க ளின் கருத்துக்களை உள்வா ங்கி வெளிநடப்பு செய் யாத வகையில் அவர் களை தக்கவைத்துக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

தேர்தல் மறுசீரமைப்பு தொடர் பில் அரசியலமைப் பில் மேற் கொள்ளப்பட விருந்த 20ஆவது திருத் தம் பொதுத் தேர்தலுக்கு குறுகிய இடைவெளிக்கு முன் னர் பாராளுமன்றில் அறிமுகம் செய் யபபட்டதனாலேயே அது வெற்றி பெற முடியாமல் போனதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (இ-7-10)






## விக்கினங்களை தீர்த்திட "விக்னேஸ்வரனாய்"



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் 76 ஆவது அகவை நிறைவை முன்னிட்டு இக்கவிதை இங்கு பிரசுரமாகிறது.

துடுப்பில்லாத ஓடம்போல
எடுப்பார்கைப் பிள்ளைகளாக
அலையும் எம்மின விதியை
நொந்தோம்.

நிலை தளர்ந்தோம்.
தொலைத்த கொள்கைகள் மீது
வித்துவம் பேசிப் பேசி
விலைபோகும் தலைவர்கூட்டம்
சுதந்திர வாழ்வுக் கனவுகள் எல்லாம்
வீட்டுக்குள்ளேயே அடைமானமாச்சு.

தறிகெட்ட மந்தைகளின் மேய்ப்பனாய்
நெறிபிசகாத் தமிழினத் தலைவனாய்
விலைபோகாத் தன்மானத் தலைவனாய்
இறை தந்த வரமாய் வந்தீர்
விக்கினங்கள் தீர்த்திடு "விக்னேஸ்வரனாய்"

நேர்கொண்ட பார்வை,
யார்க்கும் அஞ்சா ஞானச்செருக்கு,
நீதியும் நேர்மையும் கண்ணெனக் கொண்ட
சத்திய வாழ்வு.
"தலைவா"
தமிழினம் உன்பின்னால்

காலத்தின் கட்டளையாய்
கர்மயோகியாய் நீ
தமிழினத் தலைவனாய் வாய்த்தாய்
தமிழின முய்ய
துயருறுவார் துயர்தீர
உன்பணிகள் தொடர்க

அகவை எழுபத்தாறில்
கால் பதித்தாய்
ஆண்டவன் அருளால்
நீண்டநாள் வாழ்ந்து
தமிழ் இனத்துக்கு
நற்பணிபுரிக!

**செ.ராகுலன்**
**வல்வெட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்கள் குறித்த டெஸ்மன் டி சில்வாவின் அறிக்கையை வெளியிடப் போகிறாராம் கம்மன்பில

(கொழும்பு)

**போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக, டெஸ்மன்ட் டி சில்வா சமர்ப்பித்த அறிக்கையை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காவிடின், தான் அதனை வெளியிடுவேன் என்று எச்சரித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள, அவர்,

"தனியே, ஐ.நா அறிக்கையை வைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பரணகம அறிக்கை, உதலாகம ஆணைக்குழுக்களின அறிக்கைகளின்தன்மை குறித்தும் ஆராய வேண்டும்.

அதேபோல் மிகமுக்கியமாக டெஸ்மன்ட் டி சில்வாவின் அறிக்கையை சபையில் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும்.

போர் முடிவுக்கு வந்தவுடன், சுமத்தப்பட்ட போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்து கடந்த 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 23ஆம் திகதி டெஸ்மன்ட் டி சில்வா அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

அந்த அறிக்கையில், இலங்கையின் போர்ச் சூழல் மற்றும் போரின் பின்னரான மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பிலும், போர்க் காலத்தில் சட்டதிட்டங்கள் மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும், முழுமையான விபரங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அடுத்த 24 மணித்தியாலத்தில் இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த அறிக்கையை ஜனாதிபதியோ பிரதமரோ உடனடியாக வெளிப்படுத்தாவிடின் அந்தப் பொறுப்பை நான் செய்ய வேண்டிவரும்.

இந்த அறிக்கையை நான வெளிப்புடுத்துவேன். இதற்காக என்னை சிறையில் அடைத்தாலும் பரவாயில்லை. மக்களுக்காக எந்த அழுத்தங்களையும் எதிர்கொள்ள நான் தயாராகவே உள்ளேன்.

எம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை களையும் அமெரிக்காவின் அறிக்கையையும் மாத்திரம் கவனத்தில் கொண்டு செயற்படாது எமது நீதிபதிகள், எமது ஆணைக்குழுக்களின் அறிக்கையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவின் நிபந்தனைக்கு அமைய இன்று நாட்டுக்குள் அவர்களுக்கு இடம்கொடுத்தால் நாளை ஏனைய நாடுகளும் எம்மை சீண்டிப் பார்க்க ஆரம்பிக்கும்.

அதேபோல் இந்த குறச்சாட்டுக்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு அரசாங்கம் கட்டுப்படுகிறது.

சம்பந்தன்என்பவர்அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட எதிர்க்கட்சி தலைவர் அல்ல. அவருக்கு வடக்கின் பிரச்சினைகள் மட்டுமே தெரியும்.

நாட்டின் தேசிய ஒற்றுமை, சிங்கள மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தெரியவில்லை." என்றும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

## ஆயுத பூஜை வழிபாடுகளில் நாமல்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ ஆயுத பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டுள்ளார்.

ஆயுத பூஜையை முன்னிட்டு பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் கோவில் பூஜை வழிபாடுகளில் கலநது கொண்ட நாமல் ராஜபக்ஷவுக்கு கோயில்குருக்கள்விசேட பூஜை நடத்தி ஆசி வழங்கியுள்ளார். (இ-7-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி. சங்கவி முரளீதரன்



கிளி.சென்.திரேசா மகளிர் பாடசாலையில் கல்வி கற்று 2015ம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதலிடத்தையும், மாவட்டத்தில் 6ம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்த சங்கவிக்குட்டி இன்னும் பல கலையும் சிறப்போடு பெற்று உயர்நிலை அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

செந்தாளன் நுண் பொறியியல் நிறுவனம்,
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.

வாழ்த்துவோர்
மாமன்மார் குடும்பம்

(2134)

## உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுக்க ...

## LEADERSHIP TRAINING

CERTIFICATE COURSE FOR " LEADERSHIP TRAINING AND COMMUNICATION SKILL" by a team of qualified trainers for six weeks on Saturdays afternoon (2-5 pm) commensing on 31.10.2015.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். GGE O/L சித்தி யடைந்த அனைவரும் இந்தக் கற்கை நெறிப் பயிற்சிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கட்டணத்தை செலுத்திப் பதிவு செய்யலாம். வயது எல்லை இல்லை. பயிற்சிக்கட்டணம் ரூபா 2500/=. யாழ்ப்பாணக் கல்லூரி பதிவு ரூபா 500/=.

பயிற்சி நடைபெறும் இடம்: மருந்தியலாளர் கல்வி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி (பட்டப்படிப்புகள் பிரிவு) யாழ்.ஆஸ்பத்திரி வீதி (கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில்)

தொலைபேசி: 021 222 3382, 077 625 6292 (2127)


## ராசி பலன்

23.10.2015

(ஐப்பசி 06, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57மணிக்கு, ஏகாதசி பின்னிரவு 3.35 மணிக்கு அவிட்டம் முற்பகல் 8.47 மணிவரை இராகுகாலம் 10.32-12.02 மணிவரை சுபநேரம் 6.02-7.32 மணிவரை ஐப்பசி வெள்ளி,ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம் மேல்நோக்கு நாள் | | |
| | | | குரு, சுக், செவ் |
| | சனி | சூரி | ராகு, புத |

**மீனம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்,எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம்.

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், பயணங்கள் கைகூடும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும்,இழுபறியாக இருந்த காரியங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள் மறக்கமுடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்,மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது ஆழ்ந்த சிந்தையுண்டு.

**கடகம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், தேவையற்ற செலவுகள் அதிகரிக்கும்,போசன சுகக்குறைவுண்டு.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்,மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் பெறுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், உறவினர் வருகையுண்டு,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும்,கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்,தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், முயற்சிகள் கைகூடும்,போசனசுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலோ அமைப்பினால் பாதிக்கப்பட்டவர்களே பாரிஸ் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தனர்

## எம்.பி.சுமந்திரன் குற்றச்சாட்டு; கருணாகரன் மறுப்பு

**ரெலோ அமைப்பினால் பாதிக்கப்பட்டவர்களே பிரான் ஸில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள் என்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி எம்.ஏ.சுமந்திரனின் குற்றச்சாட்டை ரெலோ அமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் நிராகரித்துள்ளார்.**

கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கலநாதன், ஏ.கே.கோடீஸ்வரன், மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று கடந்த 9 ஆம் திகதி பாரிஸில் இடம்பெற்றிருந்தது. இதன்போதே சிலர் அங்கு நுழைந்து குழப்பம் விளைவித்தனர்.

இது குறித்து கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று எம்.பி. சுமந்திரனை வினவியபோது, அவர் எம்.பி. அடைக்கலநாதனை மேற் கோள் காட்டி தெரிவிக்கையில், பாரிஸில் குழப்பம் விளைவித்தவர்கள் 1990களில் இராணுவத்தினராலும் ரெலோவினாலும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. மேலும அவர்கள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரன் 1990 களில் கடுமையாக நடந்து கொண்டதாகவும் குற்றம்சாட்டினர் என்று தெரிவித்துள்ளார். எனினும் சுமந்திரனின் இந்தக் குற்றச்சாட்டை கருணாகரன் மறுத்துள்ளார்.



பாரிஸில் ஐக்கிய நாடுகள் சபையினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தொடர்பாகவும் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் எடுத்துரைக்கும் கூட்டம் ஒன்றுக்கே ஏற்பாடு செய்திருந்தோம்.

அங்கு வருகை தந்த 30 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்கள் நான்லண்டனுக்கு வந்தமை குறித்து விமர்சித்தனர். புலிகளின் குரல் உறுப்பினர், மற்றும் புலிகள் அமைப்பின் முன்னாள் புலனாய்வு உறுப்பினர் ஆகி யோரே என்னை வைதார்கள் என்று கருணாகரன் குற்றம் சாட்டியுள்ளார். மேலும் 1987இல் இடம் பெற்ற இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் எமது அமைப்பு ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ளது.

எனவே நாட்டின் எந்தவொரு பகுதியிலும் முகாம்களை வைத்திருக்க வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (3)

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் மேயர் என கூறப்படும் தங்கவேல் நிமலன் எதிர் வரும் நவம்பர் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இவர் கொழும்பு நகரின் வரை படம், மற்றும் நகரின் முக்கிய நிலையங்கள் போன்றவற்றின் வரைபடங்களை வைத்திருந்தமை மற்றும் வெடிகுண்டுகள், ஆயுதங் களை கொழும்புக்கு கடத்தி முக்கிய பிரமுகர்களை கொலை செய்ய திட்டமிட்டிருந்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இது தொடர்பான வழக்கு உயர் நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உயர் நீதி மன்ற நீதிபதி மணிலால் விஜயசேகர மேற்படி வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 24ம் திகதிக்கு ஒத்தி வைத்ததுடன் சந்தேகநபரை பூசா தடுப்பு முகாமில் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (3)

## மோசமான விமான நிலையங்களில் இலங்கைக்கு பத்தாவது இடம்

ஆசியாவில் மிகவும் மோசமான விமான நிலையங்களில் ஒன்றாக இலங்கை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் இனங் காணப்பட்டுள்ளது.

இணையத்தம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் ஆசியாவில் மோசமான நிலையில் காணப்படும் விமான நிலையங்களில் முதலிடத்தில் நேபாளம் காத்மண்டு விமான நிலையமும், பாகிஸ்தான் இஸ்லாமாபாத் விமான நிலையம் ஐந்தாவது இடத்திலும், இந்தியாவின் சென்னை விமான நிலையம் ஏழாவது இடத்திலும் பங்களாதேஷ் டாக்கா விமான நிலையம் ஒன்பதாவது இடத்திலும், இலங்கை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் பத்தாவது இடத்திலும் உள்ளன.


இலங்கை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் லஞ்சம் மற்றும் துப்புரவற்ற நிலைமைகளுக்காக விமர்சிக்கப்பட்டுள்ளது. குளியலறைகள் குறிப்பிடும் அளவில் துப்புரவின்றியும், சவர்க்காரம் மற்றும் துடைப்பான்களின்றியும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் துர்நாற்றங்கள் குளியலறைகளை விட்டு வெளியேறுகின்றன. அத்துடன்பயணிகள்இடத்தைவிட்டு வெளியேற நீண்ட வரிசையில் காத்திருகக வேண்டியுள்ளது. இவ் வாறு அந்த இணையத்தள ஆய்வில்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 525

Search for people, places and things | Nagendram | Home

அமுதன் அமு




மதி மதீசன்



டொறீன்



ராஜகுமார்



கலையரசன்




கீத்து கரன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவில் மாணவர்கள் போராட்டம்



தென்ஆபிரிக்க நாடு முழுவதும் மாணவர்களுக்கான கல்வி கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதை உடனடியாக குறைக்க வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அதை அரசு ஏற்கவில்லை. எனவே நாடு முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். பல இடங்களில் அவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். தீவைப்பு சம்பவங்களும் நடந்தன. இதனால் அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். மேலும் கண்ணீர் புகை குண்டுகளும் வீசப்பட்டன. மாணவர்கள் போராட்டம் அனைத்து இடங்களிலும் பரவி இருப்பதால் அது கலவரமாக வெடித்துள்ளது.




## 2.5 கிலோ மிளகாய் உண்ணும் சீனர்



சீனாவில் நபர் ஒருவர் மிளகாய்களை நொறுக்குத்தீனி போன்று சாப்பிட்டு வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் ஸெங்ஸோவ் பகுதியை சேர்ந்த லி யங்ஸி (48) என்பவர் தனது தோட்டத்தில் 8 விதமாக மிளகாய் பழச்செடிகளை வளர்த்து வருகிறார்.

இவர் தினமும் 2.5 கிலோ மிளகாய்களை சாப்பிடுகிறார், இதனால் அப்பகுதி மக்கள் இவரை 'சில்லி கிங்' என்று அழைக்கின்றனர்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, காலையில் எழுந்து மிளகாய்ச் செடியை வைத்துதான்பல் துலக்குவேன் காலை முதல் இரவு வரை 2.5 கிலோ மிளகாய்களைச் சாப்பிட்டு விடுவேன்.

சிறிய வயதில் இருந்தே எனக்கு இந்தப்பழக்கம்இருக்கிறது. உணவிலும் அதிக மிளகாய்களைச் சேர்த்துக்கொள்வேன்.

மிளகாய்இல்லாவிட்டால்சுவையே கிடையாது. உணவில் சேர்த்தது போக மீதி மிளகாய்களை, நொறுக்குத் தீனி போல போகும்போதும், வரும்போதும் சாப்பிடுவேன்.

மேலும் எனது உடலை,அடிக்கடி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வேன்.

இவ்வாறு சாப்பிடுவதால் எனக்கு எவ்வித உடல் உபாதைகளும் ஏற்படவில்லை என்றும், ஆனால் எனக்குள் ஏதேனும் சக்தி இருக்கிறதா என்று தெரியவில்லை எனக் கூறியுள்ளார். (3-7)

## இஸ்ரேலியர் நசியுண்டு பலி

பலஸ்தீன மேற்குக் கரையில் பலஸ்தீனர்களுடன் மோதலில் ஈடுபட்ட இஸ்ரேலியர் ஒருவர் டிரக் வண்டியால் மோதிக் கொல்லப்பட்டுள்ளார்.

ஹிப்ரொன் நகருக்கு அண்மையிலுள்ள அல் பவார் அகதி முகாமுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட இஸ்ரேலிய பிரஜை பயணம் செய்த கார் மீது வானொன்றில் வந்த பலஸ தீனர்கள் குழு வொன்று கற்களை வீசியுள்ளது.

இதனால் சினமடைந்த அந்த நபர் காரிலிருந்து இறங்கி தடியொன்றுடன் கல் வீச்சை நடத்திய குழுவினர் அமர்ந்திருந்த வானை நோக்கிச் சென்றுள்ளனர்.

இதன்போது பலஸ்தீனர்ஒருவரால் செலுத்திவரப்பட்ட டிரக் வண்டியொன்று அவர் மீது மோதவும் அவர் அந்த டிரக் வண்டியின் சக்கரமொன்றின் கீழ் சிக்கி உயிரிழந்தார்.




இதனையடுத்து டிரக் வண்டியை செலுத்தி வந்த பலஸ்தீன சாரதி தானாக முன்வந்து பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

தான் திட்டமிட்டு அந்நபர் மீது வாகனத்தால் மோதவில்லை எனவும் அது தற்செயலாக இடம்பெற்ற விபத்து எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் அன்றைய தினம் ஹிப்ரொன் பிராந்தியத்தில் படையினர் மீது தாக்குதல் நடத்திய இரு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் அன்றைய தினம் இஸ்ரேலிய படையினர், கடந்த வருடம் யூத குடியிருப்பாளர் ஒருவரை கத்தியால் குத்திக் கொன்ற பலஸ்தீன பிரஜையொருவரது வீட்டை தகர்த்துள்ளனர். (3-7)

## கலிபோர்னியாவில் ஸ்கை டைவிங்



சாகச பிரியர்களான 61 ஸ்கை டைவ் வீரர்கள் ஒன்றிணைந்து, கலிபோர்னியா வானத்தில் மிதந்து சாகசம் செய்து புதிய சாதனை படைத்துள்ளனர். பல நாடுகளை சேர்ந்த ஸ்கை டைவ் வீரர்கள் 61 பேர் ஒரு குழுவாக இணைந்து அமெரிக்காவின் கலிபோர்னியாவானத்தில்இந்தசாதனை நிகழ்வினை நடத்தியுள்ளனர்.

மொத்தம் மூன்று விமானங்களில் சென்ற இந்த சாகச குழுவினர் 13,500 அடி உயரத்தில் இருந்து கொத்து கொத்தாக குதித்துள்ளனர்.

பூமியில் இருந்து 5,500 அடி உயரத் திற்கு வந்ததும் அவர்கள் திட்டமிட்டபடி சாகசங்களை நிகழ்த்த தொடங்கியுள்ளனர்.

பார்வையாளர்களை பிரமிப்பூட்டிய இந்தநிகழ்வினைஒருங்கிணைத்த ரயா வெய்ஸ், இது ஒரு மிகவும் சிறிய குழு என்றும், கடினமான இந்த திட்டத்தை செயற்படுத்தியது மிகவும் பாராட்டுதலுக்கு உரியது என்றார். இந்த சாகச நிகழ்வில் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ரஷ்யா, போலந்த் உள்ளிட்ட 12 நாடுகளில் உள்ள பிரபலமான ஸ்கைடை வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

கடந்த யூன்மாதம்42 ஸ்கை டைவ் வீரர்கள் ஒன்றிணைந்து கலிபோர்னியாவில் நிகழ்த்திய சாகசமே சாதனையாக இருந்தது. தற்போது 61 பேர் ஒன்றி ணைந்து நிகழ்த்தியுள்ள இந்த சாகசம் அந்த சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளது. (3-7)

## அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை தொடர்ந்து அதிகரிக்கும் பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் வைத்திருக்கும் அணு ஆயுதங்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அமெரிக்க வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2011-ம் ஆண்டு வரை பாகிஸ்தானிடம் 90-110 அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் மேலும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட தூர ஏவுகணைகள் தயாரிப்பதிலும் பல நிலைகளை கடந்து விட்டதாகவும் கூறப்பட்டது. இந்நிலையில் அணுவாயுதப் நோட்புக் அமைப்பை சேர்ந்த அணு விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, தற்போது பாகிஸ்தானிடம் 110 முதல் 130 அணு ஆயுதங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 10 அண்டுகளில் பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் எண்ணிக்கை 220 முதல் 250 ஆக அதிகரிக்க கூடும்.

ஆனால் இந்தியாவிடம் 80-100 அணு ஆயுதங்களே இருப்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## லிபியாவில் குழப்பமான ஆட்சி ஐ.எஸ்ஸும் புகுந்து ஆதிக்கம்

### விமானத் தாக்குதலும் ஆரம்பம்



லிபியாவில் இரண்டு தீவிரவாத குழுக்கள் போட்டி அரசு அமைத்து இருப்பதுடன், ஒன்றுடன் ஒன்று மோதி வருகின்றன.

இந்த குழப்பத்துக்கு மத்தியில், அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகளும் இடையில் நுழைந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அவர்கள் சிர்ட்டே என்ற நகரத்தில் தங்களது நிலையை அமைத்துள்ளனர்.

அந்த நிலையை குறிவைத்து, போர் விமானங்கள் நேற்று முன்தினம் குண்டு மழை பொழிந்தன.

இது பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த காலத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற லிபியாவின் அரசு படைகள், ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி உள்ளன. ஆனால் இந்த தாக்குதலை நடத்தியது யார், அதன்சேதவிபரங்கள்என்ன என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. (3-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# துமிந்தவின் கைவிரல் அடையாளம் மீளவும் பதிவு செய்யப்பட உள்ளது

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வாவின் கைவிரல் அடையாளங்கள் மீளவும் பதிவு செய்யப்பட உள்ளன.


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிற்சங்கவாதியுமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கின் 11ம் பிரதிவாதியாக துமிந்த சில்வா பெயரிடப்பட்டுள்ளார்.

துமிந்த சில்வா உள்ளிட்ட இந்த வழக்கில் தொடர்புடைய ஏழு பேரின் கைவிரல் அடையாளங்களை மீளவும் பதிவு செய்யுமாறு கொழும்பு உயர் நீதிமன்ற விசேட நீதவான் குழாம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மூவர் அடங்கிய நீதவான் குழாமொன்று இந்த வழக்கினை விசாரணை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் மேற்குறிப்பிட்ட சந்தேக நபர்கள் வழங்கிய கைவிரல் அடையாளங்கள் தெளிவற்ற நிலையில் காணப்படுவதனால் அவற்றை மீள வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

துமிந்த சில்வா, அனுர துஸார டி மெல், சந்தன ஜகத் குமார, லங்கா ரசன்சன, விதானகே அமில, ரோஹன மாரசிங்க மற்றும் நாகொடலியனாரச்சி மற்றும் சாமிந்த ஆகியோரிடமிருந்து கைவிரல் அடையாளங்கள் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸாருக்கு. நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7-10)




# அரசியல்தீர்வுக்கு நிபுணத்துவ உதவிகளை வழங்கத் தயார்

## ஐ.நா.உதவிச்செயலர் உறுதி

(கொழும்பு)

**இலங்கையில் நீடிக்கும் இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கு உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குத் தேவையான நிபுணத்துவ உதவிகளை வழங்க ஐ.நா. தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஐ.நா உதவச் செயலர் மிரொஸ்லாவ் ஜென்கா உறுதியளித்துள்ளார்.**

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா உதவிச் செயலர் மிரொஸ்லாவ் ஜென்கா நேற்று முன்தினம் கொழும்பில் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சநதித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின் போது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கை மற்றும் அமெரிக்கஉ அனுசரணையில் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ந்தும் ஐ.நா. வலியுறுத்த வேண்டும் என்று ஐ.நா. உதவிச் செயலரிடம் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்தப் பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன, மாவை.சேனாதிராசா, சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் பங்கேற்றனர்.

அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா உதவி செயலர் மிரொஸ்லாவ் ஜென்காவுடன் ஐ.நா.வின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான அரசியல் திணைக்கள பதில் அதிகாரி மற்றும் கொழும்பிலுள்ள ஐ.நா.வதிவிட பிரதிநிதி அலுவலகத்தின் அதிகாரிகளும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் ஐ.நா பொதுச்சபையின் 70ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்காக நியூயோர்க்கிற்கு சென்றிருந்த போது அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நா உதவிச் செயலரை சந்தித்திருந்தார்.

இதன்போது இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கான பேச்சுகளை ஆரம்பித்தல் உள்ளிட்ட முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இருவருக்கு இடையிலும் கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

இதன்போது இனப்பிரச்சினை தீர்வுக்கான சில விடயங்களை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.


அதன் தொடர்ச்சியாகவே அவருடைய தற்போதைய பயணம் அமைந்துள்ளதாக எம்மிடத்தில் தெரிவித்தார் என சுமந்திரன் தெரிவித்தார்.

இணைந்த வடக்கு, கிழக்கில், அதியுச்ச அதிகாரங்கள் பகிரப்பட்டு சமஷ்டி ஆட்சி முறையில் தமிழ் மக்கள் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழக்கூடிய வகையிலான. நீடித்து நிலைத்திருக்கக் கூடிய தீர்வொன்றை எட்டுவதே அரசியல் தீர்வு தொடர்பாக நாம் கொண்டுள்ள நிலைப்பாடு என்று அவருக்கு எடுத்துரைத்தோம்.

அது தொடர்பாக கவனம் செலுத்துவதாக குறிப்பிட்ட ஐ.நா. உதவி செயலர் உள்நாட்டிலேயே அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் முன்னெடுககப்பட்டாலும். ஐ.நா அமைப்பு அதற்காக நிபுணத்துவ ஆலோசனை உட்பட அனைத்துவிதமான ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு தயாராகவுள்ளதாகவும் அதையடுத்து ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை மற்றும் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஆகியவற்றில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குரிய சகல விதமான நடவடிக்கைகளையும், ஐ.நா.தொடர்ந்தும் முன்னெடுப்பதுடன் அரசாங்கத்திற்கும் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் எனவும் கோரினோம்.

நிரந்தர அரசியல் தீர்வு குறித்த விடயங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு சமாந்தரமாக, அரசியல் கைதிகளின் விடுதலை, காணிகள் விடுவிப்பு, எமது மக்களின் வாழ்வாதார மேம்பாடு உள்ளிட்ட விடயங்களில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளில் ஐ.நா. வின் பங்களிப்புக்கள் அவசியமாக காணப்படுகின்றன. அதனை முழுமையாக வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டோம் என்று தெரிவித்தார். (இ-7-10)

## ‘அபூபக்கர்’ இலங்கையில்



பங்களாதேஷ் கடற்படைக்குச் சொந்தமான “அபூபக்கர்” என்ற கப்பல் நல்லெண்ண விஜயமாக இலங்கை வந்தடைந்துள்ளது. கொழும்பு துறைமுகத்தில் கடற்படையினர் இலங்கை கடற்படையினர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றபோது

## இடமாற்றங்கள் தொடர்பான தீர்மானத்திற்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்பு

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும்பதவியுயர்வுகள்மற்றும் இடமாற்றங்கள். தொடர்பான முறைப்பாடுகள் அனைத்தும். தொழிற்சங்கங்களின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவித்துள்ளமையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெகுவாகப் பாராட்டுகின்றது.

கடந்த காலங்களில் திணைக்களத் தலைவர்கள் தாம் விரும்பியபடி பதவியுயர்வுகள்,இடமாற்றங்கள் போன்றவற்றை மேற்கொண்டு வந்தனர். இதனால் பல அரச உத்தியோகத்தர்கள் மிகவும் பாதிக்கப்பட்டதுடன் தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதற்கும் யாருமின்றி வேதனைப்பட்டுள்ளனர். தமது நிலைப்பாட்டை தொழிற் சங்கங்களின் ஊடாக தெரியப்படுத்தினாலும் அவை கருத்தில் கொள்ளப்படுவதில்லை. பெரும்பாலான பதவியுயர்வுகள் இடமாற்றங்கள் அரசியல் கலந்தவையாகவே காணப்பட்டன.

அரசியல் செல்வாக்கு இல்லாதவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறான நிலைமை பிரதமரின் தீர்மானத்தின் மூலம் பாதிக்கப்படும் அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு வழி சமைத்துக் கொடுத்துள்ளது. பிரதமரின் இவ்வாறான நல்ல முடிவினை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்சரா. புவனேஸ்வரன் பாராட்டியுள்ளார். புதிய அரசின் நல்லாடசியில் அரச திணைக்களங்கள் சீராக ஒழுங்கமைக்கப்பட்டு அரச உத்தியோகத்தர்கள் பழிவாங்கப்படுவது நிறுத் தப்பட்டு சீரான சேவை நடைபெறஎமதுவேண்டுகோளை முன் வைக்கிறேன் என அவர் மேலும்தெரிவித்தார். (இ-7-10)

## கடூழியச் சிறை

தும்பளைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொரு வரை அச்சுறுத்தி அவரிடம் இரு நது சுமார் 3 இலட்சம் ரூபாவை அபகரித்த நபருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நட்டஈடாக ஒரு இலட்சம் ரூபாவை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 2013 ஆம் ஆண்டளவில் இடம்பெற்றது.ஆனால் இது தொடர் பாக அப் பெண்ணினால் கொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதனையடுத்து அந்நபர் தனது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக் கொண்டுள்ளதையடுத்து ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்த நீதிபதி மா.கணேசராஜா பாதிக்கப்பட்ட அப் பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபா செலுத்துமாறும் அதனைச் செலுத்தத் தவறும்பட்சத்தில்மேலும் ஒரு வருட [illegible] உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முள்ளிவளை உப-பணிமனையின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியும் கருத்தரங்கும் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் முள்ளியவளை உப-அலுவலகத்தில் முள்ளியவளை உப பணிமனை பொறுப்பதிகாரி நா.ஶ்ரீதரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சனசமூக நிலைய உத்தியோகத்தர் அ.சசிக்குமார், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் ஜெ.செல்வன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் சமூக ஆர்வலர்கள், மாணவர்கள் பாடசாலை நூலக ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-முள்ளியவளை செய்தியாளர்)

# நெல் மூடைகளின் கொள்வனவில் தாமதம் முல்லைத்தீவு விவசாயிகள் திண்டாட்டம்

(முள்ளியவளை)

நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடை நிறுத்தி வைக்கப்பட்ட நெல் மூடைகள் கொள்வனவு நடவடிக்கையானது இன்றுவரை தொடரப்படாமையால் விவசாயிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நாட்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் இடை நிறுத்தி வைக்கப்பட்ட நெல் மூடைகளைக் கொள்வனவு இன்று வரை முன்னெடுக்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகளிடம் இருந்த நெல் மூடைகளே கொள்வனவு செய்யப்படாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் விவசாயிகள் வங்கிகளில் அடைவு வைத்த நகைகளை உரிய காலத்திற்குள் பணம் செலுத்த முடியாமையினால் அவை ஏலத்தில் விடப்படவுள்ளதாக வங்கி நிர்வாகத்தினரால் கடிதங்கள் விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டஅதிகாரிகள் விரைந்து நெல் கொள்வனவை மேற்கொண்டு விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2- 302)




# கறுப்பு வானம் நூல் வெளியீடு

நெடுந்தீவு முகிலன் எழுதிய 11 ஆவது நூல் வெளியீடான கறுப்பு வானம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளி நொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆசிரியர் அ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடை பெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகு லராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மகளிர் ஒன்றியத் தலைவர் த. செல்வராணி, கிளிநொச்சி மகேரியா தடைப்பிரிவு அதிகாரி ந.அரசசிங்கம், கிளிநொச்சி பிர தான பொலிஸ் பரிசோதகர் சி.ஜ.புத்திக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி தேசிய சிவாச்சாரியார் ஜெ.ஜெயந்தன் குருக்கள்,கிளிநொச்சி பாரதிபுரம் தென்னிந்தியத் திருச்சபை போதகர் த.யோஸ் துரைரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் க. விக்னராஜா ஆற்ற முதற் பிரதியை கிளி.ஜயனார்புரம் அ.த.க. பாடசாலை, வன்னேரி கிளிநொச்சி பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் த.கமலநாதன்,பெரிய தம்பனை அன்புபாளர் முன்பள்ளி ஆசிரியர் திருமதி விவேகானந்தராசா கருணாதேவி ஆகியோர் பெற்றுக் கொள்வார்கள். மதிப்பீட்டுரையை கவிஞர் அநாமகன் ப.ஜேயல்பியசீலன் நிகழ்த்துவார். (2)

# சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கான போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(வவுனியா)

சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்கள் மற்றும் சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு சபையின் விவசாய, கமநல சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்களையும் சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்களையும் தெரிவு செய்து கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இப் போட்டி முதலில் விவசாய போதனாசிரியர் மட்டத்தில் நடத்தப்பட்டு மூன்று சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்களும் சிறந்த சேதன விவசாயச்செய்கையாளர்களும் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டாம் கட்டமாக மாவட்ட மட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இவ்வாறு மாவட்ட மட்டத்தில் மூன்று தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்களும், வெற்றிக்கேடயமும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தத்தமது பகுதியிலுள்ள விவசாய போதனாசிரியர் காரியாலயத்திலும், மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திலும், மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்திலும் போட்டிக்கான விதிமுறைகளை அறிந்து கொண்டு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விவசாய போதனாசிரியரிடம் கையளிக்க வேண்டும்.

மாவட்ட மட்ட வெற்றியாளர்களுக்கு உழவர் பெருவிழாவில் பணப்பரிசில்களும், வெற்றிக் கேடயமும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# சட்டவிரோத காடழிப்பு, குடியேற்றம் குறித்து சாதகமாக அணுகி நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் உறுதி

முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத காடழிப்பு மற்றும் குடியேற்றம் குறித்து உரிய நடவடிக்கையெடுக்கப்படும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் உறுதியளித்துள்ளார்.

அமைச்சரது அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளையில் அரச அமைச்சர் ஆதரவுடன் நூற்றுக்கணக்கான ஏக்கர் காடுகள் சட்டவிரோதமான முறையில் அழிக்கப்பட்டு வருகின்றது.

இக்காட்டிற்குள் தமிழர்களின் வரலாறு இடங்களான வன்னியன் மேடு, பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்பனவும் உள்ளன.

இவ்விடங்களும் சட்ட விரோத குடியேற்றவாசிகளினால் அழிக்கப்பட்டும் வருகின்றது.

இவை குறித்து அமைச்சரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேற்படி குடியேற்றம் மற்றும் காடழிப்பு குறித்து வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் நானும் நேரில் சென்று பார்வையிட்டிருந்தோம்.

இக் காடழிப்பினை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டால் அது தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒரு முறுகலை ஏற்படுத்தலாம்.

ஆகையால் இதனை சாதகமான முறையில் அணுகி உரிய நடவடிக்கையெடுக்கப்படும். இது குறித்து முதலமைச்சரிடம் மீண்டும் தெரியப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (2-4)

# சேகரிக்கப்படும் தரவுகள், புள்ளிவிபரங்கள் உண்மைத் தன்மையானதாக இருக்க வேண்டும்

## முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவிப்பு



சர்வதேச புள்ளிவிபரவியல் தினத்தையொட்டிய முல்லைத்தீவு மாவட்டத்தில் புள்ளிவிபரவியல் கிளையினரால் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மாவட்டச் செயலக மகாநாட்டு மண்டபத்தில் நிகழ்வு நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக முல்லை அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்டச் செயலக பிரதம கணக்காளர், மாவட்ட திட்டப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் பாடசாலை மாணவர்கள் மாவட்டச் செயலக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் அரசாங்க அதிபர் உரையாற்றுகையில், ஒவ்வொரு பிரதேசங்களினதும் மாவட்டங்களினதும் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் துல்லியமான தரவுகளும் போதிய புள்ளி விபரங்களுமே உறுதுணையாக அமையும். எனவே சேகரிக்கப்படும் தரவுகள், புள்ளி விபரங்கள் ஆகியன நேர்த்தியான முறையில் உண்மைத்தன்மை நிறைந்ததாக அமையவேண்டும் என எடுத்துக்கூறினார் இந்நிகழ்வில் புள்ளிவிபரங்கள் தொடர்பான விபரணங்கள் புள்ளிவிபரக் கிளையினரால் விளக்கப்பட்டது. (2-302)

## அம்பளப்பெருமாள்குளம்

# கமக்கார அமைப்பு விவசாயிகளுக்கு மானிய உர விநியோகம் இன்று

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள அம்பளப் பெருமாள்குளம் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கான 2015-2016 ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கைக்கான மானிய உரவிநியோகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்படும் என துணுக்காய் கமநல சேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ள தாவது,

அம்பளப்பெருமாள் குளத்திற்குட்பட்ட கமக்கார அமைப்பின் விவசாயிகளில் ஆரம்ப கட்ட தரை பண்படுத்தல், பிரதான கால்வாய், அணைக்கட்டு ஆகியவற்றின் துப்புரவு பணிகளை மேற்கொண்டவர்களுக்கும் தற்போது நெல் விதைப்பை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கான முதலாம் கட்ட மானிய உர விநியோகம் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 79 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

## துணுக்காய் பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை 79 இலட்சம் ரூபா நிதி மூலம் துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் நலன்சார் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பிரதேச சபையின் செயலாளர் கந்தசாமி சத்தியநாதன் அறிவித்துள்ளார்.**


இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட ஆரோக்கியபுரம் கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக 20 இலட்சம் ரூபா நிதியில் நீர்த்தாங்கியொன்று அமைக்கப்பட்டு நீர் விநியோக குழாய்களும் பொருத்தப்பட்டுள்ளன.

கோட்டைகட்டிய குளம், அம்பளப்பெருமாள் குளம், தென்னியங்குளம், உயிலங் குளம் ஆகிய கிராம மக்களின் நலன் கருதி கோட்டைகட்டிய குளம் கிராமத்தில் 9 இலட்சம் ரூபா நிதியில் வாராந்த சந்தைக்கான கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை மு/மல்லாவி மத்திய கல்லூரிக்கு அருகாமையிலுள்ள கிரவல் மண் வீதி 680 மீற்றர் தூரத்தை தார் வீதியாக மாற்றுவதற்கு 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக

# பூநகரி பிரதேச செயலகத்திற்கான கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பம்



இடைநிறுத்தப்பட்டிருந்த பூநகரி பிரதேச செயலகத்திற்கான நிரந்தர கட்டடம் அமைக்கும் பணிகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரி வாடியடி சந்திப்பகுதியில் பூநகரி பிரதேச செயலகத்திற்கான நிரந்தர கட்டடம் அமைக்கும் பணிகள் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட நிலையில் அதற்கான நிதி திறைசேரிக்குத் திரும்பிச் சென்றமையால் கட்டடப் பணிகள் கைவிடப்பட்டன. அதனைத்தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து 15 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து தற்போது இக்கட்டடப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வடக்கு மாகாண இலக்கிய பெருவிழா இன்றும் நாளையும் கிளிநொச்சியில்

(கண்டாவளை)

வடக்கு மாகாண இலக்கியப் பெருவிழா-2015 இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும்.

இன்று நடைபெறும் முதலாம் நாள் நிகழ்வு பிற்பகல் 2மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலுள்ள கலைஞர் கூசை சந்தியா அரங்கில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்புவிருந்தினராகவடக்குமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளாக,

பரதநாட்டியம், கிராமிய நடனம், நாட்டார் பாடல், நடனம், கோலாட்டம், பாளை நடனம், சிங்கள பாரம்பரிய நடனம், பல்கலாசார நடனம், மானாட்டம், காவடி நடனம் என்பன இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலுள்ள வேலாயுதபிள்ளை மகாலிங்கம்(தமிழையா) அரங்கில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், கிளிநொச்சிமாவட்டஅரசாங்கஅதிபர்சுந்தரம்அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.து இரண்டாம் நாள் நிகழ்வின் பண்பாட்டு ஊர்வலம், கிளிநொச்சி காக்கா கடைச்சந்தி யில் இருந்து ஆரம்பமாகி கூட்டுறவு மண்டபம் வரை சென்றடைந்துஅங்குகலைநிகழ்வுகள்இடம்பெறும்.

இரண்டாம் நிகழ்வின் கலை நிகழ்வுகளாக, மயில் நடனம், கதம்ப நடனம், சிறந்த நூலுக்கான பரிசு வழங்கல், கௌரவ முதலமைச்சர் விருது வழங்கல், நாட்டிய நாடகம், பாம்புகளின் நர்த்தனம், நாட்டுக்கூத்து ஆகியன இடம்பெறும். (2-15-263-281)

# எமது சொந்த நிலங்களில் குடியேற அனுமதியுங்கள்

## கேப்பாப்பிலவு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் சொந்தக் காணிகளில் குடியேற முடியாமையினால் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

தற்போது 4 பரப்பு காணி வழங்கப்பட்டு 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்றைய இடங்களில் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடு கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன் இவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் மர வகைகள் தரம் குறைந்தவையாகவும் காணப்படுகின்றது.

சொந்தக் கிணறுகளும் இல்லை, இவர்களுடைய பூர்வீக நிலங்களில் சொந்தமான கிணறு, பயன்தரும் மரங்கள், கஷ்டங்களுக்கு மத்தியில் கட்டிய வீடுகள் இருந்தன. இந்நிலங்கள் ஒரு ஏக்கர் தொடக்கம் 10 ஏக்கர் வரை பெரியதாக விவசாய நடவடிக்கைகளை வீட்டுச் சூழலிலேயே மேற்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

ஆனால் அவை எல்லாம் தற்போது முடியாத காரியமாகிவிட்டது. இவர்களுடைய பல ஏக்கர் நெல்வயல்களில் சில நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் மேலும் பல ஏக்கர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இதனால் பொருளாதார ரீதியாகவும் தாம் கஷ்டப்படுவதாக கேப்பாப்பிலவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தமது பூர்வீக காணிகளில் வனவளத் திணைக்களத்தினர் தமது அடையாளக் கல்லினை இடுவதாகவும் இம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே தமது பூர்வீக நிலங்களில் தாம் குடியேறுவதற்கு அனுமதிக்குமாறு கேப்பாப்பிலவு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-250)





# ஆட்கள் நடமாட்டமற்ற கட்டடங்களில் தினமும் சட்டவிரோதமான செயற்பாடுகள்

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் புனரமைக்கப்படாத மற்றும் ஆட்கள் நடமாட்டமற்ற கட்டடங்களில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் இதனால் அப்பகுதிமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வின் பின் கிளிநொச்சி நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இதுவரை புனரமைக்கப்படாமலும் பயன்பாடு இன்றியும் ஆட்கள் நடமாட்டமின்றியும் காணப்படும் கூடுதலான கட்டடங்களில் தினமும் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

குறிப்பாக, மது அருந்துதல், கால்நடைகளை கடத்திச்சென்று இறைச்சிக்காக வெட்டுதல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் அதிகளவில் காணப்பட்டு வருவதாக மக்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

குறித்த சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களினால் தாம் பல்வேறு வகையான அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நவராத்திரி பூஜை வழிபாடுகள் இடம்பெற்ற போது...
(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தகவல் தொழில்நுட்ப பாட விநாடி-வினா போட்டி முடிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் -6 தொடக்கம் தரம்-13 வரைக்குட்பட்ட மாணவர்களுக்கிடையே வலய மட்டத்தில் நடைபெற்ற தகவல் தொழில்நுட்ப பாடத்தின் விநாடி வினாப் போட்டியில் தரங்கள் ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி. எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இதற்கமைய,

**தரம் -6**

எம். கௌதமன்-மு/யோகபுரம் மகா வித்தியாலயம், வி.திருவரங்கன்- மு/ஒலுமடு தமிழ் வித்தி., பி.அபிசன்-மு/மல்லாவி மத்திய கல்லூரி.

**தரம் -7**

ஜி.சதீஸ்குமார்-மு/ஒட்டுசுட்டான் மகா வித்தி., கே.கவிசாந்-மு/திருமுறிகண்டி இந்து வித்தி., ஜெ.துளசிகா- மு/மல்லாவி மத்திய கல்லூரி.

**தரம் -8**

என்.வேணுஜன்-மு/யோகபுரம் மகா வித்தி., எஸ்.றதுசிகன்-மு/ஒட்டுசுட்டான் மகா வித்தி., எஸ்.சாருஜன்-மு/மாங்குளம் மகா வித்தி.

**தரம்-9**

பி.அஜிர்தன்-மு / மல்லாவி மத்திய கல்லூரி, பி.சஞ்சீவன்- மு/திருமுறிகண்டி இந்து வித்தி., வி. கயூரங்கன்-மு/யோகபுரம் மகா வித்தி.

**தரம்-10**

ச.பிரியங்கா- மு/திருமுறிகண்டி இந்து வித்தி., க.கிசோபிகன்-மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தி., வி.பிரியங்கன்-மு/யோகபுரம் மகா வித்தி.

**தரம் -11**

ச.சாருஜன்- மு/ மாங்குளம் மகா வித்தி., கே.சானுஜன்-மு/யோகபுரம் மகா வித்தி., எம்.நிலோஜன்-மு/பாலி நகர் மகா வித்தி.

**தரம்-12**

ஏ.மிதுர்ஷன்-மு/யோகபுரம் மகா வித்தி., வெ.நிவேந்திகன்-மு/ஒட்டுசுட்டான் மகா வித்தி., கே.வினோராஜ்-மு/மல்லாவி மத்திய கல்லூரி.

**தரம்-13**

அ.சயூக்சன்-மு/ஒட்டுசுட்டான் மகா வித்தி., பி.துலக்சன்-மு/மல்லாவி மத்திய கல்லூரி, கே.யோன்கென்றி-மு/யோகபுரம் மகா வித்தியாலயம். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை,முல்லைத்தீவு

## 2016 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள, இறைச்சிக் கடைகள் 2016ம் ஆணடு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 23.10.2015 தொடக்கம் 05.11.2014 3.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 06.11.2015 முற்பகல் 10 மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 06.11.2015 முற்பகல் 10.30 மணி

1.கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை "செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத் தீவு." என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 06.11.2015 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு 06.11.2015 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

2.கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

5.ஆகக் குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

6.கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

7.கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல் களிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

8.இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் உடனடியாக குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

9.இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியினை பிரதேசசபை எல்லைக்கு அப்பால் கொண்டு செல்ல எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாது.

10.எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்படவேண்டும்.

11.இறைச்சிக்கடைகளுக்கு சபையால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகை செலுத்தப்படவேண்டும்.

12.கேள்விதாரரின் பிணைப்பணம் உரிய குத்தகை ஒப்பந்த காலம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (உரிய வரிகளுடன்) பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.

14. குத்தகைக் காலம் ஒரு வருடமாகவே இருக்கும். ஆயினும் இதற்குக் குறைந்த காலப்பகுதி அறிவித்தலின் பிரகாரம் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு அமையலாம். எது எவ்வாறாயினும் ஒப்பந்தம் அவ்வருடம் டிசெம்பர் மாதம் 31ம் திகதிவரையிலுமே செல்லுபடியாகும். இக்கால அவகாசத்திற்கு குத்தகைப் பணத்தை செலுத்தத்தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் சபைக்குரியதாக மாற்றம் செய்வதுடன் அவர்களது பெயர் கேள்வி கோரும் தகுதியுடையவரின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் தவறுநர் பட்டியலிலும் சேர்த்துக்கொள்ளப்டும்.

15.யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்வி சபை க்கும் பிரதேசசபை செயலாளருக்கும் உரிமை உண்டு. அதனால் ஏற்படும் செலவுகளுக்கு நட்ட ஈடு கோர கேள்விதாரருக்கு உரிமை இல்லை.

16.சபையின் செயலாளரின் இவ் ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்போம் என்றும் இது தொடர்பாக சபைக்கெதிராகவோ / செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

17.கரைதுறைப்பற்று பிரதேசசபையின எல்லைக்குட்பட்ட கொக்கிளாய், புதுமாத்தளன் ஆகிய இடங்களில் இறைச்சிக் கடைகள் சபையால் அமைத்து வழங்கப்படும் வரை தாங்களே தற்காலிக கடை அமைத்தல் வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்கமாட்டாது. அத்துடன் சபையால் கடை கட்டி வழங்கவில்லை என்ற காரணத்தை முன் வைத்து மாதாந்த கட்டுப்பணத்தில் விலக்களிப்போ குறைப்பனவோ மேற்கொள்ளப்படமாட்டாது.

18. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் (VAT, NBT) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT, NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| 01. முள்ளியவளை உப அலுவலகம் | | | | |
| 1 | முள்ளியவளை பொதுச் சந்தை | 1,000.00 | 20,000.00 | 925,000.00 |
| 2 | தண்ணீரூற்று பொதுச் சந்தை | 1,000:00 | 40,000.00 | 1,880,000.00 |
| 3 | வற்றாப்பளை பொதுச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 148,000.00 |
| 4 | கேப்பாபிலவு பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 11,500.00 |
| 5 | சிலாவத்தை பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 55,000.00 |
| 6 | முள்ளியவளை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 25,000.00 | 842,500.00 |
| 7 | முள்ளியவளை கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 230,000.00 |
| 8 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 25,000.00 | 892,000.00 |
| 9 | தண்ணீரூற்று கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 566,500.00 |
| 10 | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 3,000.00 | 40,000.00 |
| 11 | சிலாவத்தை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 20,000.00 | 700,000.00 |
| 12 | சிலாவத்தை கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 77,500.00 |
| 13 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 17,000.00 |
| 14 | கேப்பாபிலவு கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 15 | வற்றாப்பளை கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 02. முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச் சந்தை | 1,000.00 | 35,000.00 | 1,565,000.00 |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 40,000.00 | 1,446,500.00 |
| 3 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 20,000.00 | 714,000.00 |
| 4 | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 3,000.00 | 55,000.00 |
| | 03. கொக்கிளாய் உப அலுவலகம் | | | |
| 1 | கொக்குத்தொடுவாய் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 2 | கொக்குத்தொடுவாய் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 3,000.00 | 30,000.00 |
| 3 | கொக்கிளாய் கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 25,000.00 |
| 4 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 3,000.00 | 30,000.00 |
| | 04. முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | |
| 1 | முள்ளிவாய்க்கால் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 28,000.00 |
| 2 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 150,000.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 4 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 05. செம்மலை உப அலுவலகம் | | | | |
| 1 | அளம்பில் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 34,500.00 |
| 2 | குமுழமுனை பொதுச் சந்தை | 1,000.00 | 8,000.00 | 237,000.00 |
| 3 | செம்மலை பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 39,000.00 |
| 4 | அளம்பில் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 12,000.00 | 440,000.00 |
| 5 | அளம்பில் கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 82,500.00 |
| 6 | குமுழமுனை மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 5,000.00 | 88,000.00 |
| 7 | குமுழமுனை கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 20,000.00 |
| 8 | குமுழமுனை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |
| 9 | செம்மலை கோழி இறைச்சிக் கடை | 1,000.00 | 2,000.00 | 15,000.00 |

**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு 21.10.2015.** (சி/2524)

**ஜெ.செல்வன், செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று பிரதேசசபை,முல்லைத்தீவு

## முல்லைத்தீவு புதிய கடைத் தொகுதி, முல்லைத்தீவு பட்டண சந்தைக் கட்டடத்தின் மேற்தள கடைகளுக்கான உரிமை வைப்புப் பண மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் முல்லைத்தீவு உப அலுவலக எல்லைக்குட்பட்ட நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பொதுமக்களிடமிருந்து 2015 நவம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் முதலாம் வருடம் (31.12.2015 வரை)கீழ் குறிப்பிடப்படும் மாத வாடகைக்கு கடைகளை வழங்குவதற்கு ஏதுவாக கடைகளுக்கான உரிமைப் (திறப்புப்) பண கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:- 23.10.2015 தொடக்கம் 05.11.2015 பிற்பகல் 3.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 06.11.2015 முற்பகல் 10.00 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 06.11.2015 முற்பகல் 11.00 மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை "செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 06.11.2015ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு 06.11.2015 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

1.கேள்விப் பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

2.கேள்விப் பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும்செலுத்திமேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

4.ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

5.கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

6.கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளரிற்கு பூரண அதிகாரமுண்டு.

7.வாடகை வருடாவருடம்/ சபையால் நிர்ணயிக்கப்படும் கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.

8.கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவர். (உ+ ம் மகன் மகள்)

9.சபையின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும்மேற்கொள்ளமுடியாது.

10.நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பண ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

11.தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேன்டும்.

12.வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தல் இன்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

13.சபையின் செயலாளரின் இவ் ஒப்பந்தம தொடர்பாக எவ்வித முடிவையும்ஏற்போம் என்றும் இது தொடர்பாக சபைக்கெதிராகவோ செயலாளருக்கெதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கமுடியாது.

14.கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் VAT, NBT நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு சந்தை மேற்தள கடை | | | | | |
| 1 | கடை இலக்கம் 11 | 2,500.00 | 1500.00 | 10,000.00 | 150,000.00 |
| 2 | கடை இலக்கம் 12 | 2,500.00 | 1500.00 | 10,000.00 | 150,000.00 |
| 3 | கடை இலக்கம் 16 | 2,500.00 | 1500.00 | 10,000.00 | 150,000.00 |
| 4 | கடை இலக்கம் 17 | 2,500.00 | 1500.00 | 10,000.00 | 150,000.00 |
| 5 | கடை இலக்கம் 18 | 2,500.00 | 1500.00 | 10,000.00 | 150,000.00 |
| புதிய கடைத் தொகுதியிலுள்ள கடை | | | | | |
| 1 | கடை இலக்கம் 07 | 6500.00 | 1500.00 | 10,000.00 | 390,000.00 |

கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு 22.10.2015.

(சி-2524)

ஜெ.செல்வன், செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு.

# பாரம்பரிய உடைகளை அணிவதே பொருத்தம்

நாட்டில் நடைபெறும் அரச மட்டத்திலான தேசிய இந்து சமய நிகழ்வுகளின் போது அதில் கலந்துகொள்ளும் இந்துக்கள், எமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான பாரம்பரிய உடைகளை அணிவது பொருத்தமாக இருக்குமென சர்வதேச இந்து மத பீடத்தின் தலைவர் தேசபந்து சிவஸ்ரீ.பாலா. ரவிசங்கர சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நமது எதிர்கால சந்ததியினருக்கு நல்ல முன்னுதாரணமாக அமையும் இவ்விடயத்தில் மேட்டுக்குடி உயர்பதவி வகிக்கும் இந்துக்களாயினும் அரசியல்வாதிகளாயினும் விதிவிலக்காக நடந்துகொள்ளக் கூடாது.

ஓர் இந்து மத குருவாக சொல்லவேண்டிய விடயங்களை சொல்லவேண்டிய நேரத்தில் சொல்லாமல் அல்லது பேசாமல் நமக்கேன் பகை என நினைத்து, இந்து குருமார் மௌனிகளாக கடந்த காலத்தில் இருந்ததை நமது சமூகம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கமே இன்று நல்லாட்சி, கருத்துச் சுதந்திரம் என்ற விடயங்களில் கவனம் செலுத்தும்போது நமது சமயத்தை, சமூகத்தை, கலை மற்றும் கலாசார பாரம்பரியங்களை எடுத்துக்கூறி விழிப்படையச் செய்ய வேண்டியது இந்து குருமார்களின் கடமையேயாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ருஹுணை பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியாக்கிரகம்

ருஹுணை பல்கலைக்கழகததின் சுகாதார கற்கைகளுக்கான மாணவர்கள் தங்களது கோரிக்கைகள் நிறைவேறும்வரை நேற்று முன்தினம் முதல் சத்தியாக்கிரகத்தில் குதித்துள்ளனர்.

மாணவர்களின் பரீட்சைக்கான உரிமையை உறுதி செய்யுமாறும், பரீட்சைகளின் ஊடாக மாணவ ர்களை பழிவாங்கும் நிர்வாகத்தின் போக்கை கைவிட கோரியும் இணை சுகாதார கற்கைகளுக்கான மாணவர்கள் நேற்று முன்தினம் காலி, கராப்பிட்டிய மருத்துவபீடத்தின் முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொணடிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை அடையாள சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்த மாணவர்கள், மருத்துவ பீடத்தின் முன்பாக அமர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். ருஹுணைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தப் போராட்டங்களை ஒழுங்கு செய்துள்ளது. (இ-7-10)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:21உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: B/1576

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 63செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்
தொ.இ: B/1578

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 43செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:HNDAதனியார் தொழில்
தொ.இ: B/1594

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 47செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BSC/பொறியியளாளர்
தொ.இ: B/1597

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 23
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSC/அரசதொழில்
தொ.இ: G/2702

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 17
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:கால்நடைவைத்தியர்
தொ.இ: G/2705

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 30செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSC/ஆசிரியர்
தொ.இ: G/2718

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 77
உயரம்: 5'5"தகைமை/தொழில்:BIT/தனியார் தொழில்
தொ.இ: G/2721

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail: kalyanamalai.jaffna@gmail.com
அலுவலகம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 மில்லியன் ரூபா நிதியினை துஷ்பிரயோகம் செய்தார் விமல்

## சஜித் குற்றச்சாட்டு

வீடமைப்புத்துறை முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தமது பதவிக் காலத்துக்குள் சுமார் 60 மில்லியன் ரூபாய்கள் நிதியை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டு ள்ளது.

வீடமைப்புத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

மெத்தேகொட மற்றும் கஹதுடுவ வீடமைப்பு திட்டங்களிலேயே இந்த துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளன

இந்த வீடமைப்பில் உள்ள வீடுகள் 10 மில்லியன் ரூபாய்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளபோதும் அவை 8 மில்லியன் ரூபாய்களுக்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

அதேநேரம் இரண்டு திட்டங்களிலும் 8 வீடுகள், முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (இ-7-10)

# தோண்டி எடுக்கப்பட்டது தாஜுடீனின் சடலமா?

## டீ.என்.ஏ.பரிசோதனை

அண்மையில் தோண்டி எடுக்கப்பட்டது றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனுடைய சடலம் தானா? என்பதை உறுதி செய்ய மரபணு பரிசோதனை மேற்கொள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரியப் படுத்தியுள்ளதாகவும் இதன்படி தாஜுடீனின் தாயுடைய மரபணுக்கள் பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பபபட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் இரகசியப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் இந்த சந்தேகத்திற்குரிய மரணம் தொடரில் 31 பேரிடம் விசாரணை செய் யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தி யுள் ளனர். இந்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் 10ஆம் திகதி மீண்டும் விசாரணை க்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (இ-7-10)

## வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 22.10.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 138.61 | 143.16 |
| பவுண்ட் | பிரிட்டன் | 213.02 | 221.67 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 156.17 | 163.22 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 143.44 | 150.22 |
| டொலர் | கனடா | 104.88 | 109.78 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 99.18 | 104.39 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.07 | 103.40 |
| யென் | ஜப்பான் | 1.1501 | 1.2017 |

மத்திய கிழக்கு நாடு


| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 373.8156 |
| குவைத் | டினார் | 467.4709 |
| ஓமான் | ரியால் | 366.2665 |
| கட்டார் | ரியால் | 38.7317 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.599 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.3906 |

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 300 | 300 | 250 |
| தக்காளி | 120 | 100 | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 40 | 40 | 50 |
| கோவா | 70 | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 90 | 120 | 60 |
| பூசணி | 50 | 40 | 50 | 60 | 40 |
| புடோல் | 80 | 40 | 70 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 130 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 240 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 120 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 100 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 140 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 30 | 50 | 60 | 40 |
| கறிமிளகாய் | 180 | 180 | 150 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 80 | 100 | 160 | 140 |
| போஞ்சி | 180 | 200 | 150 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 60 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 280 | 350 | 250 | 400 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 40 | 40-50 | 50 |
| இராச்வள்ளி | 160 | – | – | – | – |
| வெங்காயப்பூ | 180 | – | – | – | 180 |
| முள்ளங்கி | 40 | – | 40 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 25 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## வேலூர் சிறையில் கண்டி மன்னர் 17



உடனே மன்னர் தன்னிடமுள்ள வெள்ளிப் பிடி போட்ட கைத்துப்பாக்கிகளையும் கத்திகளையும் வீசி எறிந்தான். ஆனால் தன் இடையில் எப்போதும் வைத் திருந்த தங்க உடைவாளை மட்டும் கொடுக்க மறுத்து விட்டார்.

மன்னர் மனைவிகளையும் இராணுவத்தினர் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் அணிந்திருந்த நகைகளை ஆத்திரத்தோடு அறுத்தனர். ராணிகளின் காதில் அணிந்திருந்த வைரக்கம் மல்களைப் பிடித்திழுத்தபோது காது அறுந்து இரத்தம் வடிந்தது.

அப்போது மூத்த தளபதி அங்கு வந்து இவர் இது நாள் வரை மன்னராக இருந்தவர். அவருடன் இருப்பவர்கள் அரச குடும்பத்தினர்.

மேலும் இவர் நம்மை எதிர்த்து போர் புரியவில்லை. எனவே இவர்களைச் சித்திரவதை செய்யக் கூடாது. உரிய மரியாதையுடன் நடத்த வேண்டும் என்றார்.

அதை அனைவரும் ஒப்புக் கொண்டனர். சில பல்லக்கு கொண்டு வரப் பட்டன. அவற்றில் மன்னரையும் ராணிகளையும் ஏற்றிக் கொழும்பு நகரை நோக்கிச் சென்றனர்.

இந்த பல்லக்குகளுக்கு முன்னும் பின்னும் இராணுவத்தினர் குதிரைகளில் சென்றனர்.

அன்று மாலை டொய்லி என்ற வெள்ளைக்கார உயர் தளபதி தங்கியிருந்த இடத்திற்கு மன்னர் குடும்பத்தினர் அழைத்துச் செல்லப் பட்டனர். அவர்களை டொய்லி மரியாதையுடன் நடத்தினான். உங்கள் எவருடைய உயிருக்கும் ஆபத்து ஏற்படாது என்று மன்னரிடம் அவர் உறுதிமொழி கொடுத்தார்.

அன்றிரவு ஒரு கூடாரத்தில் அரச குடும்பத்தினர் தங்க வைக்கப்பட்டனர். விடிய விடிய கூடாரத்தைச் சுற்றி இராணுவத்தினர் காவல் புரிந்தனர்.

மறுநாள் அரச குடும்பத்தினர் கொழும்பு நகருக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். அங்கு அவர்கள் தங்குவதற்கு பெரிய வீடொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கண்டி மன்னர் விக்கிரம ராச சிங்கனை கொழும்பு நகரில் சில நாட்கள் வீட்டுக் காவலில் வெள்ளையர்கள் வைத்தனர்.

அப்போது கண்டி இராச்சியம் அரசுரிமையை இங்கிலாந்து அரசுக்கு எழுதிக் கொடுக்கும்படி அவரிடம் ஆங்கிலேயத் தளபதிகள் வற்புறுத்தினர்.

இனி வேறு வழியில்லை. சாசனத்தை எழுத மறுத்தால் எல்லோரையும் கொன்று விடுவார்கள் என்று விக்கிரம ராசசிங்கன் கருதினான்.

### தமிழில் கையெழுத்து

எனவே வெள்ளையர்கள் கூறியபடி சாசனம் தயாரிக்கப்பட்டது. அதில் விக்கிரம ராசசிங்கன் என்கின்ற கண்ணுச்சாமி என்று தமிழில் கையெழுத்துப் போட்டான்.

கண்டி அமைச்சர்களாக இருந்த சிங்களர்களும் தமிழில்தான் கையெழுத்திட்டார்கள்.

சிங்களர் உட்பட அனைவரும் தமிழில் கையெழுத்துப் போட்டிருப்பதால் அப்போது கண்டியில் தமிழ் தான் ஆட்சி மொழியாக இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

கண்டி மன்னர் எழுதிக் கொடுத்த சாசனம் இலங்கையிலுள்ள ஆவணக் காப்பகத்தில் பத்திரமாக உள்ளது.

### வேலூரில் சிறைவாசம்

சில நாட்கள் கழித்து விக்கிரமராசசிங்கனை இலங்கையில் இருந்து நாடு கடத்த வெள்ளையர் முடிவு செய்தனர்.

அதன்படி அவரையும் அவர் குடும்பத்தினர் அனைவரையும் கொழும்பில் இருந்து கோவன் வாலிஸ் என்ற கப்பலில் சென்னைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தக் கப்பல் 24.01.1816 இல் கொழும்பில் இருந்து சென்னைக்குப் புறப்பட்டது.

கப்பல் சென்னை போய்ச் சேர்ந்த பின் அங்கிருந்து வேலூருக்குக் கொண்டு போனார்கள். வேலூர் கோட்டையில் முன்பு திப்பு சுல்தானின் மகன்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்த இடத்தில் விக்கிரமராசசிங்கனையும் அவர் மனைவிகளையும் குடும்பத்தினரையும் அடைத்து வைத்தனர்.

### 16 ஆண்டுகள்


கண்டியின் மிகப்பெரிய அரண்மனையில் தங்கச் சிம்மாசனத்தில் அமர்ந்து 18 ஆண்டுகள் ஆட்சி நடத்திய விக்கிரமராச சிங்கன் வேலூர் சிறையில் 16 ஆண்டுகள் கைதியாகக் காலம் கழித்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா தீர்மானத்தை தடுத்து நிறுத்துங்கள்!

## ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை



(கொழும்பு)

**ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் அமுல்படுத்தப் படுவதை, மஹாநாயக்க தேரர் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து சமயத் தலைவர்களுக்கு ஜி.எல். பீரிஸ் எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஊடகவிலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மாத்திரமே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையால் அழுத்தம் கொடுக்க முடியும் என அவர் கூறினார்.

எனினும், நாட்டில் அரசியல் மறுசீரமைப்பை உருவாக்குவதற்கோ ஏனைய உள்ளக விடயங்களில் தலையிடுவதற்கோ ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாம் சிறந்தது என நினைக்கும் விடயங்களை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை செய்வதற்கு நிர்ப்பந்திக்குமாயின் நாட்டில் நாடாளுமன்றம் இருப்பதன் பயன் என்னவென ஜி.எல் பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7-10)

# பிள்ளையானின் தகவல்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்

## அசாத் சாலி வலியுறுத்து





(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்ற சிவநேசத்துரை சந்திரகாந்தன் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய தகவல்கள் தொடர்பில் முழு நாடும் கவனம் செலுத்தியுள்ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்துடன் பிள்ளையான் நெருங்கி செயற்பட்டார். கடந்த காலத்தில் நடந்த மோசடிகள் குறித்து உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் இதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அசாத் சாலி கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சராக இருந்த காலத்தில் அவரை கொலை செய்யும் ஒப்பந்தத்தை தனக்கு வழங்கியிருந்ததாக பிள்ளையான் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இது குறித்தே விசாரணை நடத்தப்பட வேண்டும் என அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அசாத் சாலியின் இந்த கருத்து குறித்து பதிலளித்துள்ள முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ரொஹான் வெலிவிட்ட, ஒரு சந்தேக நபர் வெளியிட்டும் தகவல்களை பொலிஸ்துறையின் பொறுப்புமிக்க அதிகாரிகளே ஊடகங்களுக்கு வழங்க முடியும்.

அப்படியானதகவல்களைஅசாத்சாலிக்கு வெளியிட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## இந்தியாவுடன் இணைந்து

# அனல்மின் நிலையத்தை அமைப்பது ஆபத்தானது

(கொழும்பு)

இந்தியாவுடன் இணைந்து சம்பூரில் அனல்மின் நிலையம் அமைக்கப்படவுள்ளமை ஆபத்தான விடயம் என்று மின்சார சபை தொழிற்சங்கமொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

மின்சார சபையின் பொறியியலாளர் தொழிற்சங்கமே குறித்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் அதுல வன்னியாரச்சி தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது, சம்பூரில் அமைக்கப்படவுள்ள அனல் மின் நிலையம் இந்திய- இலங்கை கூட்டு நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக செய்து கொள்ளப்பட்டுள்ள இருதரப்பு ஒப்பந்தம் இலங்கைக்கு மிகவும் பாதகமான வகையில் அமைந்துள்ளது.

இலங்கைக்கு பாதகமான நிபந்தனைக்குப் பதிலாக ஜப்பானுடன் இணைந்து அமைக்கப்படவுள்ள அனல்மின் நிலையத்துக்குப் பதிலாக, ஜப்பானுடன் இணைந்து அனல்மின் நிலையம் அமைப்பது கூடுதல் பயன்தரக் கூடியது என்றும் மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### யார் பெரியார்?

இந்தியாவுக்கு குஞ்சலம் மாதிரி தொங்குகின்ற இலங்கை அழகான நாடு. புராணங்களில் அது குபேரன் ஊராக சொல்லப்படுகிறது.

இந்த அவலத்திற்கு காரணம் இனப்பிரச்சினை என்று வெளிப்படையாகப் பேசப்பட்டாலும் மனித குலத்திற்கே பொதுவான அகங்காரம் போர்க்குணம் பிறரை அழிப்பதில் உள்ள குரூர சந்தோசம் இவையே மூலகாரணம். இனப் பிரச்சினை இல்லை என்றால் இன்னொரு பிரச்சினையால் மனிதர்கள் சண்டை போடுவார்கள்.

நடுத்தெருவில் திடீர் என்று இரண்டு பேர் சண்டை போடுவார்கள். இந்தச் சண்டைகளைச் சுற்றி நின்று சில மூடர்கள் வேடிக்கை பார்ப்பார்கள். சில முரடர்கள் விடாதே... அடி என்று சத்தமிட்டு ஊக்கம் அழிப்பார்கள். அப்போது திருடர்கள் வேடிக்கை பார்க்கின்ற ஜனங்கள், பரிசுகளை சுட்டுக்கொண்டு போய் நாலு காசு பார்ப்பார்கள். இந்த சண்டைகளை வேடிக்கையாகப் பார்ப்பவர்கள் ஊக்குவிப்பவர்கள் இதன் மூலம் கொள்ளை அடிப்பவர்கள் இவர்களைத் தாண்டி இருவரையும் சண்டையிடாத படி செய்கிறவன் யார்? அவன் தான் அந்தப் பகுதியிலேயே பெரிய மனிதன் என்று அர்த்தம்.

அங்கே சண்டை நடக்கிறது... இரண்டு பேர் அடித்துக் கொள்கிறார்கள் என்று ஒருவர் கத்தியதும் ரத்தம் வருதா பாருப்பா... ரத்தம் வரைலனா அப்புறம் என்ன சண்டை என்று அலுத்துக் கொள்கிற சின்ன புத்தி ஜென்மங்களும் இந்த உலகத்தில் இருக்கின்றன.

இலங்கை பிரச்சினையில் உலகின் பெரும் நாடுகள் எப்போதோ தலையிட்டு நியாயம் வழங்கி இருக்கலாம். செய்யவில்லை... ஏன்? பிறநாட்டு உள் விடயங்களில் தலையிடாமை என்கிற பண்பு ஒன்றும் முக்கிய காரணமல்ல. வியட்நாமிலும் வேறுபல பகுதிகளிலும் மூக்கை நுழைத்த அமெரிக்காவுக்கு காரணமாவது... கற்பாவது..!

இனப்பிரச்சினை இருக்கிறவரை இலங்கை அரசு உலக நாடுகளுக்கு அடங்கி நடக்கும். ஆயுத உற்பத்தி செய்யும் வல்லரசுகளுக்கு டொலர் டொலராக கொட்டிக் கொடுக்கும் டொலரை ஈட்ட தனது செல்வமான தேயிலை போன்றவற்றை வல்லரசுகளுக்குச் சல்லிசான விலையில் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

சண்டையை வேடிக்கை பார்க்கும் கூட்டத்தை நன்கு பயன்படுத்தி பர்சைத் திருடும் ஜேப்படித் திருடர்கள் மாதிரி தான் உலக நாடுகள் நடந்து கொள்கின்றன. பெரிய பெரிய நாடுகள் எல்லாம் **பெரிய மனிதர்களாக நடந்து கொள்வ வில்லை**

ஒரு அசத்தலான கதை ... கொஞ்சக் காலம் முந்திய கதை.... யானை வியாபாரி ஒருவன் ஒரு நாட்டின் தலை நகரில் வந்து யானை .. குறும்பு யானை... சுட்டித்தனமாக நிறைய வித்தை செய்து காட்டியது. கூட்டம் கூடி நின்று ரசித்து கை தட்டியது.

அவன் ஒரு கறார் வியாபாரி. சொன்னால் சொன்ன விலை என்று விற்கும் முரட்டு பேர்வழி. எல்லோரும் யானை என்ன விலை என்றதும் ஆயிரம் ரூபாய்... ஒரே விலை என்று அடித்துச் சொன்னான். பலர் நழுவி விட்டார்கள். அந்தக் காலத்தில் ஆயிரம் ரூபாய் பெரிய விடயம்.

ஒரு பணக்காரருக்கு மட்டும் அதை வாங்குவதற்கு கொள்ளை ஆசை. ஆனால் கொஞ்சம் கஞ்சப் பேர்வழி.. அது மட்டும் இல்லை... அவன் சொன்ன விலைக்கு வாங்கினால் தன் கௌரவம் என்னாகும் என்கிற அசட்டுக் கௌரவம் வேறு. ஆனால் யானையை விடவும் மனசில்லை. எனவே ஒரே விலை 999 என்று போட்டார் ஒரு போடு.

1000, 999 என்று மாறி மாறி இருவரும் பிடிவாதமாகச் சண்டையிட்டார்கள். சண்டையை வேடிக்கை பார்க்க பெரிய கூட்டம் சேர்ந்து விட்டது. முடிவில் பிரிந்து விட்டார்கள். வியாபாரம் படியவில்லை.

ஆனால் மறுநாள் காலை யானை வியாபாரி ஓவென்று அழுது கொண்டிருந்தான். யானை இரவே பாம்பு கடித்துச் செத்துப் போயிருந்தது. அவன் அழுகையைப் பார்த்து மறுபடியும் பெரும் கூட்டம் கூடி விட்டது.

யானையை 999 ரூபாய்க்குக் கேட்டவர் ஆரம்பித்தார். இப்பொழுது என்ன பண்ணறது. நேத்திக்கு 1 ரூபாய் குறைய மாட்டேன்னு பிடிவாதம் பண்ணின. 999 ரூபாய்க்கு வித்திருந்தா நட்டம் வந்திருக்குமா? இப்ப ஏன்அழறே என்று இடித்துக் காட்டினார்.

யானை இறந்து போனதுக்கு அழல... யானை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம்னு பழமொழி. ஆனால் ஊரா இது.. இந்த ஊர்ல பெரிய மனுசனே இல்லியேன்னு தான் அழறேன் என்றார் யானை வியாபாரி.

வியாபாரி விளக்கினார் நானும் நீயும் நேத்திக்கு 1 ரூபாய்க்குச் சண்டை போட்டோம். ஊரே கூடி வேடிக்கை பார்த்தது. ஒரு ஆள் கூட முன்னால வந்து சரி... சரி... நீ ஒரு எட்டணா குறைச்சுக்க. நீ ஒரு எட்டணா விட்டுக்கொடு அப்படினு சமாதானம் பண்ணலயே! சமாதானம் பண்ண ஒரு பெரிய மனுசன் இல்லாத ஊராப் போச்சே என்று அழறேன் என்று முடித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

35

## ஐந்து வேடங்களில் சின்னப்பா!

குரலை மாற்றக் கூடிய மருந்தை ஒரு விஞ்ஞானி கண்டுபிடிக்கிறார். அந்த மருந்துக்கு அட்டாமிக் எசன்ஸ் என்று பெயர்.

பாகவதர் என்று பெயர் எழுதப்பட்ட பாடலில்


மனோன்மணியில் சின்னப்பா- டி.ஆர். ராஜகுமாரி

உள்ள மருந்தைக் குடிக்கிறார் விஞ்ஞானி. அப்போது அவர் பாடும் பாட்டு பாகவதரின் முகுந்தனே நந்தன் மைந்தனே பாட்டு.

இதேபோல் வெவ்வேறு மருந்தைக்குடித்து பேபி சரோஜா, எம். எஸ்.சுப்புலட்சுமி ஆகியோரின் குரலில் பாடுகிறார்.

இந்தக் காட்சியில் விஞ்ஞானி யாக நடித்தவர் எஸ்.வி.சுப்பையா போன்ற தோற்றமுடைய டி.கே. கோவிந்தன்.

விகடயோகிக்குப் பிறகு நடித்த பங்கயவல்லி (1947) என்ற படம் சரியாக ஓடவில்லை.

கிருஷ்ண பக்தி 1948 சுமாரான படம் என்றாலும் அதில் சின்னப்பாவின் கதாகால சேபம் பிரதானமாக அமைந்தது.

**தாத்தா- . தந்தை- பேரன்**

1949 இல் வெளிவந்த மங்கையர்க்கரசி குறிப்பிடத்தக்க படம். இதில் தாத்தா (தாடியுடன்) தந்தை (அரும்பு மீசை) பேரன் (மீசையி ல்லாமல்) ஆகிய3 வேடங்களில் சின்னப்பா நடித்தார்.

கண்ணாம்பா , அஞ்சலிதேவி, என்.எஸ். கிருஷ்ணன், ரி.ஏ.மதுரம் ஆகியோர் உடன் நடித்தனர்.

படம் சுப்பர் ஹிட் ஆக அமையவில்லை என்றாலும் வெற்றிப்படம் தான். மாறுபட்ட 3 வேடங்களில் சின்னப்பா நடிப்பு பிரமாதம்.


**ரத்னகுமார்**

பாகவதரை வைத்து அசோக்கு மார் படத்தை எடுத்து முருகன் டாக்கீசா சின்னப்பாவை வைத்து ரத்னகுமார் (1949) என்ற படத்தைத் தயாரித்தனர்.

இந்தப் படத்தில் சின்னப்பாவும் பானுமதியும் ஜோடியாக நடித்தனர். மற்றும் எம்.ஜி.ஆர்., என்.எஸ். கிருஷ்ணன், ரி.எம். மதுரம் ஆகியோரும் நடித்தனர். படத்தைக் கிருஷ்ணன் - பஞ்சு டைரக்ட் செய்தனர்.

பாழடைந்த சத்திரத்தில் தலையில் ஒரு கல்லுடன் பேய் (எலும்புக்கூடு வடிவில்) வசித்து வந்தது. அங்கு வந்து தங்குகிறவர்களிடம் போட்டுமா என்று பயங்கரக்குரலில் பேய் கேட்கும். எல்லோரும் பயந்து ஓடுவார்கள்.

நாடோடியான சின்னப்பா போட்டுத் தான் தொலையேன் என் பார். பேய் கல்லைப் போட்டதும் அந்த இடம் அரண்மனையாக மாறும். சின்னப்பா அரசனாகி விடுவார். பானு


கிருஷ்ண பக்தியில் டி.ஆர்.ராஜகுமாரியுடன்

மதியைக் கைவிட்டு அரசகு மாரியைக் காதலித்தார். அவர் கையில் அணிந்திருந்த மோதிரம் கழன்று விழ மீண்டும் ஆண்டியாகி விடு வார்... இப்படிச் சொல்லும் மாயா ஜாலக் கதை ரத்னகுமார்.

ரத்னகுமார் படப்பிடிப்பின் போது சின்னப்பாவிற்கு மோதல் ஏற்பட்டது. கதாநாயகி பானுமதியுடனும் பிரச்சினை ஏற்பட்டது.

இது பற்றிப் படத்தில் டைரக்டராக (கிருஷ்ணன்) பஞ்சு ஒரு கட்டுரையில் எழுதியிருப்பதா வது,

அப்போது பி.யு.சின்னப்பா மிகப்பெரிய நடிகர். அவரைப் பற்றி பலர் பலவிதமாக பயங்கர மான கதைகளைப் பேசிக் கொண் டிருந்த நேரம் அவரிடம் நெருங்கு வதற்கே எல்லோரும் பயப்படு வார்கள்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி


ஆன்மீகம் 303

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

நீங்கள் உடனே என்னுடைய தேவைகளைப் பற்றி கவலைப் படவில்லையென்றால் எவ்வாறு அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும். யார் என் குடும்பத்தைக் கவனித்துக்கொள்வார்கள். என்னுடைய வியாபாரம் என்னவாகும் என்றெல்லாம் எண்ணலாம்.

நீங்கள் இவற்றையெல்லாம் பற்றி எண்ணத்தான்வேண்டும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு மட்டும் இந்த எல்லாச்சுமைகளையும் உங்கள் தலையில் இருந்து எடுத்துவிட்டு நான் சொல்வதைச் செய்யுங்கள்.

எவ்வாறாயினும் உங்கள் குடும்பம் அல்லது உங்கள் வியாபாரம் உங்களால் தான் நடக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? நான் சொல்கிறேன் எல்லாம் இலகுவான நடந்து கொண்டிருப்பதற்கு காரணம் நாமல்ல. ஆனால் நாம் இருந்தும் அவை மென்மையாக நடந்து கொண்டிருக்கின்றன. பிரபஞ்ச இருப்புத் தன்மை நமது குடும்பங்களையோ அல்லது நமது செல்வத்தையோ காப்பதற்கு நமது அறிவைச் சார்ந்திருக்க வேண்டியிருந்திருக்குமேயாயின் நாம் அனைவரும் தற்சமயம் அநாதைகளாக இருப்




போம். மிகவும் தெளிவாக இருங்கள்.

வெறுமனே கவலைப்படுவதன் மூலம் எதையும் சாதிக்கமுடியாது. நாம் கவலைப்படுவதைப் பற்றி ஏற்கனவே போதுமானளவு பேசியிருக்கின்றோம் என்று நினைக்கின்றேன்.

அதனால் வெறுமனே சில நிமிடங்கள் கண்களைமூடி ஏற்கனவே உங்கள் மீது பொழியப்பட்டதன் மீதும் ஏற்கனவே உங்களுடன் இருப்பதன் மீதும் கவனத்தை வையுங்கள்.

மனப்பூர்வமாக எல்லா விடயங்களையும்- உங்கள் உடல், உங்கள் செல்வம் உங்களை ஆதரிக்கும். மற்றும் உங்களுக்கு உதவும் மக்கள், உங்கள் வீடு, உங்கள் ஆடம்பரப் பொருட்கள், உங்கள் விடுமுறைகள் எல்லாவற்றையும்- பாருங்கள்.

அவையெல்லாவற்றையும் தளர்வுடனும் நன்றியுணர்வுடனும் மகிழ்ச்சியாக அனுபவியுங்கள். எவ்வளவு நேரம் முடிகிறதோ அவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மிகவும் அவசரமாகவும் வேகமாகவும் ஓடாதீர்கள். அவை எல்லாவற்றையும் நிதானமாக உங்கள் மனதளவில் வாருங்கள். அந்த உணர்விலேயே நிலைத்திருங்கள். சற்று நேரம் அந்த அற்புதமான மனநிறைவான உணர்விலேயே நிலைத்திருங்கள்.

நீங்கள் நன்றியுணர்வால் நிரம்புவதையும் பொங்கிப் பிரவகிப்பதையும் உணருங்கள்.

நீங்கள் கண்களைத் திறக்கும் போது உங்க ளிடம் இருப்பது உங்கள் வாழ்க் கையை நடத்த தேவையானதற்கும் அதிகமாகவே இருப்பது காண் பீர்கள். மேலும் நீங்கள் இதற்கு மேலும் என்ன வேண்டுமென்று ஆச்சரியப்படுவீர்கள்.

நீங்களே வெறுமனே நன்றியுணர்வாகி விடவேண்டும்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமணத் தம்பதிகளின் புதுவிதமான ஆசை

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாண்ட் பகுதியில் புதுமணத் தம்பதிகள் 6 பேர் தமது திருமண தினத்தன்று வித்தியாசமான ஒருமுறையில் புகைப்பபடம் எடுக்க தீர்மானித்தனர்.

இதன் போது பயங்கரமான உருவம் ஒன்று தம்மை துரத்துவது போல் போஸ் கொடுத்தனர். புதுமணத்தம்பதிகளின் புதுவிதமான ஆசை இது.



## அமெ.ஜனாதிபதிக்கு இந்தியாவில் ஹெலி

அமெரிக்க ஜனாதிபதி பயணம் செய்யக்கூடிய ஹெலிகொப்டர்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுப்பர் ஹாக் விஹெச் 92" என்ற இந்த ரக ஹெலிகொப்டர்களில், முதல் கட்டமாக 6 ஹெலிகொப்டர்களை தயாரிக்கும் பணியில் அமெரிக்காவின் லாக்ஹீட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இங்கு உருவாக்கப்படும் விஹெச் ஹெலிகொப்டர்கள் மிகவும் நவீனமானவையாகும்.

அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பை முன்னிட்டு ஹெலிகொப்டரின் சிறப்புத் தன்மைகள், இதில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன வெளியிடப்படவில்லை.

இதன் உட்பகுதிகள் அனைத்தும் அமெரிக்காவில் ஒருங்கிணைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

# ஐ.நா.பொதுச்செயலர் தேர்தலில் வெளிப்படைத்தன்மை வேண்டும்

## இந்தியா வலியுறுத்தல்

**ஐ.நா. பொதுச்செயலாளர் தேர்தலில் வெளிப்படைத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி உள்ளது.**

இது தொடர்பாக ஐ.நா. சபை கூட்டத்தில் பங்கேற்க சென்றுள்ள இந்திய தூதுக்குழுவில் இடம் பெற்று உள்ள பாராளுமன்ற உறுப்பினர் பார்த்ரு ஹரி மாதப் இதனை தெரிவித்துள்ளார்.

"ஐ.நா. பொதுச்செயலாளர் தேர்தலில் பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்களாக உள்ள 5 நாடுகளே முக்கிய பங்காற்றும் இரகசிய வாகெடுப்பு முறையில் தேர்தல் நடைபெறுகிறது. இந்த இரகசிய வாக்கெடுப்பு முறையை மாற்றி வெளிப்படைத் தன்மையுடன் அடுத்த ஐ.நா. பொதுச்செயலாளரை தேர்ந்து எடுக்க வேண்டும். ஐ.நா. அமைதிப் படைக்கு வீரர்களை அனுப்பும் நாடுகளுடன் ஐ.நா. அமைதிப்படையை ஒரு இடத்திற்கு அனுப்புவதற்கு முன் கலந்து ஆலோசிக்க வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (3-7)



## இந்தியாவில் அதிக ஆண்கள்

(நியூயோர்க்)

இந்தியாவில் பெண்களை விட ஆண்கள் அதிகளவில் இருப்பதாக ஐ.நா. சபை ஆய்வில் தெரியவந்து உள்ளது.

ஆண், பெண் விகிதம் குறித்து 'உலகின் பெண்கள் 2015' என்ற தலைப்பில் ஐ.நா. சபை ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது.

அதில், கிழக்கு ஆசியா, தெற்கு ஆசியா, மேற்கு ஆசியா ஆகியவற்றில் பெண்களை விட ஆண்கள் அதிகளவில் இருப்பதாக தெரியவந்து உள்ளது. அதாவது, கிழக்கு ஆசியாவில் 50.5 மில்லியன் ஆண்களும், தெற்கு ஆசியாவில் 49.5 மில்லியன் ஆண்களும், மேற்கு ஆசியாவில் 12.1 மில்லியன் ஆண்களும் உள்ளனர். (3-7)

## நேதாஜி பற்றிய தகவல்களை வழங்க ரஷ்யாவிடம் கோரிக்கை



(மொஸ்கோ)

நேதாஜி பற்றிய இரகசிய தகவல்களை பகிர்ந்து கொள்ளுமாறு ரஷ்ய மந்திரியிடம் சுஷ்மா சுவராஜ் நேரில் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், கடந்த 1945ஆம் ஆண்டு தாய்வானில் நடைபெற்ற விமான விபத்தில் பலியானதாக கூறப்பட்டு வருகிறது. ஆனால், அதை அவருடைய குடும்பத்தினர் உள்ளிட்ட கணிசமானோர் நம்ப மறுக்கிறார்கள். அவர் மாயமாக மறைந்தது குறித்த இரகசிய ஆவணங்கள், மத்திய அரசிடமும், சில வெளிநாட்டு அரசுகளிடமும் இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

அவற்றை வெளியிடுமாறு கோரிக்கை விடுத்து வருகிறார்கள். கடந்த மாதம், மேற்கு வங்காள அரசு, தன்னிடம் இருந்த 64 இரகசிய கோப்புகளை வெளியிட்டது. அதையடுத்து, நேதாஜி குடும்பத்தினர், கடந்த வாரம் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து, மத்திய அரசிடம் உள்ள இரகசிய ஆவணங்களை வெளியிடுமாறு வலியுறுத்தினர்.

இதனால், நேதாஜி பற்றிய இரகசிய ஆவணங்களை வெளியிடும் பணி, அவரது பிறந்த நாளான ஜனவரி 23ம் திகதி தொடங்கும் என்று பிரதமர் அறிவித்தார். மேலும், வெளிநாட்டு அரசுகளிடம் உள்ள இரகசிய ஆவணங்களை வெளியிடுமாறு வற்புறுத்துவேன் என்றும் உறுதி அளித்தார்.

இந்நிலையில், மத்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். அங்கு அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் செர்ஜி லவ்ரோவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

அப்போது, நேதாஜி பற்றி ரஷ்ய அரசிடம் உள்ள தகவல்களை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு ரஷ்ய அமைச்சர் செர்ஜி லவ்ரோவ், இந்த பிரச்சினையை கவனிப்பதாகவும், ஏதேனும் தகவல் இருந்தால் இந்தியாவிடம் தெரிவிப்பதாகவும் உறுதி அளித்துள்ளார். (3-7)

# தலித் குழந்தைகள் இருவர் டில்லியில் எரித்துக்கொலை

## தொடர்கிறது வீதி மறியல் போராட்டம்

இந்தியத் தலைநகர் டில்லி அருகே இரண்டு குழந்தைகள் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முக்கிய நெடுஞ்சாலை ஒன்றை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பரிதாபாத் என்ற இடத்தில் உள்ள வீதிகளை மறித்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் மேலும் பலரும் இணைந்துகொண்டுள்ளனர்.

தலித் குடும்பம் ஒன்றை உயிரோடு எரித்துக் கொலை செய்ய நடந்த முயற்சியில் இந்தக் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

10 மாதங்களே ஆன ஒரு குழந்தையும் 2 வயதான இன்னொரு குழந்தையும் கொல்லப்பட்ட சம்பவம் நாடளாவிய ரீதியில் கண்டன அலையை எழுப்பியுள்ளது.

குழந்தைகளின் பெற்றோரான ஜிதேந்தர் மற்றும் ரேகா ஆகியோர் டில்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்கள். தாய் ரேகாவின் நிலைமை கவலைக்கிடமாகவே உள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்திற்கு காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள், ஆம் ஆத்மி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.



பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ராகுல் காந்தி ஆறுதல் கூறியுளளார்.

சம்பவ இடத்திற்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்துள்ள காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி, சாதி வன்முறைகளை ஒழிக்க தொடர்ந்து தீவிரமாக போராடப் போவதாகக் கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலத்தில் இது போன்ற பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய முதல்வர் மனோகர் லால் கட்டார், மாறாக மக்கள் மாட்டிறைச்சி உண்பது குறித்து கவலைப்படுவதாக குற்றம் சாட்டினார்.

உயர் சாதி வகுப்பைச் சேர்ந்தவர்களே இந்த செயலில் ஈடுபட்டதாக குழந்தைகளின் தந்தை ஜிதேந்தர் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கூறினார்.

சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வாக்குவாதத்தில், தன்னை ஊரை விட்டு வெளியேறுமாறு மிரட்டிய உயர்சாதியை சேர்ந்த கும்பல் ஒன்று, மீறினால் தன்னையும் தன் குடும்பத்தினரையும் கொன்று விடுவதாக அச்சுறுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவார்கள் என்று ஹரியானா மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார் உறுதியளித்துள்ளார். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## 18.10.2015-16.11.2015 வரை



**எதை, எப்போது, எப்படிச் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்த சிம்ம ராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்ற சுக்ரனோடு பரிவர்த்தனையும் பெற்றிருக்கிறார். எனவே மாதத்தில் முற்பாதியைக் காட்டிலும் பிற்பாதியே நன்மையை அளிக்கும். முற்பாதியில் விரயங்களும், பிற்பாதியில் வருமான உயர்வும் உண்டாகும். குருமங்கள யோகமும், சனி சந்திர யோகமும், உச்ச புதனின் ஆதிக்கமும் இருக்கும் விதத்தில் கிரக நிலைகளின் சஞ்சாரம் விளங்குவதால் மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். தங்கு தடைகள் அகலும்.

ஜென்ம செவ்வாயின் ஆதிகத்தால் கோபம் கொஞ்சம் கூடுதலாகவே வரலாம். பொங்கி வரும் கோபத்தை அடக்கிக் கொள்வதன் மூலம் புதிய வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலும். சுக்ர பலம் நன்றாக இருப்பதால் வசதி வாய்ப்புகளுக்கு குறைவிருக்காது. வரன்கள் வாயிற்கதவைத் தேடி வந்தும் இதுவரை திருமணம் முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் பிள்ளைகளின் கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

அந்நிய தேச வாய்ப்புகள் ஒரு சிலருக்கு எண்ணிபடியே வந்து சேரும். புண்ணிய காரியங்களுக்கு பொருளுதவி செய்து மகிழ்வீர்கள். உடன்பிறப்புகளின் இல்லத் திருமண விழாக்களை முன்னின்று நடத்தும் வாய்ப்பு கைகூடி வரும். 2-ல் ராகு இருப்பதால் தேவைக்கேற்ற பணம்வந்து கொண்டேயிருந்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், எதையும் ஒரு முறைககுப் பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. அஷ்டமத்துச் சனியில் பாதிபங்கு வலிமை உடைய அர்த்தாஷ்டமச் சனி ஆரோக்கியத் தொல்லைகளை அதிகம் கொடுக்கலாம்.

எனவே நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளை செய்வது நல்லது. என்ன இருந்தாலும் சனி வழிபாடு உங்கள் சங்கடங்களை தீர்க்கும் என்பதால், ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து விநாயகர் கவசம் பாடி விநாயகப் பெருமானையும், அனுமன் கவசம்பாடி அனுமனையும், சனி கவசம் பாடி சனி பகவானையும் வழிபடுவது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

இம்மாதம் தொடக்கத்தில் துலாம் ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். மாதக் கடைசியில் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். ஒக்டோபர் 27-ல் புதன் வலிமை இழக்கிறார். எனவே முதல் 9 நாட்கள், மாதத் தொடக்கத்தில் புதன் நற்பலன்களை வழங்கலாம். குடும்ப ஒற்றுமை கூடும். கலகம் விளைவித்தவர் கலககத்திற்கு ஆளாவர். அஸ்

## குழப்பங்கள் அகன்று குதூகலம் கூடும் நேரம்

தமன புதனின் ஆதிக்கம் வரும் பொழுது அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் குறை வாகவே இருக்கும். முன்பின் தெரியாதவர்களிடம் ஏமாற் றங்களைச் சந்திக்க நேரிடும். பிறருக்கு பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்திலேயே பூர்த்தியாகும். சகோதர வழி பிரச்சினை மீண்டும் தலை தூக்கலாம். தொழில் கூட்டாளிகள் உங்களை விட்டு விலகுவர்.




பொறுமையுடன் செயற்பட வேண்டிய நேரமிது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம்.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**


உங்கள் ராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாய். 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் இரண்டில் சஞ்சரிக்கும் பொழுது இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு ஒருசிலருக்கு கை கூடும்.

வீடு வாங்கிகுடியேறும் யோகமும் ஒரு சிலருக்கு உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பர். தாய்வழி ஆதரவு மற்றும் மாமன் வர்க்கத்தினரின் ஆதரவும் உண்டு. இம்மாதம் முருகப் பெருமானை வழிபட்டு முன்னேற்றம் காணுங்கள். சக்தி வழிபாடு சஞ்சலம் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஒரு இனிய மாதமாகும். குருமங்கள யோகம் இருப்பதால் நினைத்த காரியம் நினைத்தபடியே நிறைவேறும். தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். ஆன்மீகப் பயணங்களை மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் சுப காரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவது நல்லது. அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். 4-ல் சனி இருப்பதால் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் கன்னி ராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் புதன் உச்சம் பெற்கிறார். எனவே, உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கடைதிறப்பு விழாக்களும், கட்டடத்திறப்பு விழாக்களும் நடத்த வேண்டுமென்ற ஆசை நிறைவேறப் போகின்றது. விரய ஸ்தானத்தில் 3 கிரகங்கள் முற்றுகையிட்டு இருக்கின்றன. எனவே, விரயங்கள் மேலோங்கும். இந்த மாதத்தில் சுப நிகழ்ச்சிகளுக்கு முதலீடு செய்வது நல்லது.

இல்லத்தில் மங்கல ஓசை கேட்க எல்லா தெய்வங்களையும் வழிபட்டு விட்டோமே இனி எப்பொழுதுதான், விடிவு காலம் பிறக்குமென்று நினைத்தவர்களுக்கு பிள்ளைகளின் மண விழா, பெற்றோர்களின் மணி விழா, குழந்தைகளின் காதணி விழா போன்றவைகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும்.

3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் விரய ஸ்தானத்தில் இருப்பதால், சகோதர வர்க்கத்தினரால் விரயங்கள் ஏற்படலாம். குறிப்பாக சகோதரர்கள் தாங்கள் செய்யும் தொழிலுக்கு முதலீடு செய்யச் சொல்லி வற்புறுத்தலாம். அல்லது அவர்களின் குழந்தைகள் படிப்பதற்காகவும், அந்நிய தேச பயணத்தை மேற்கொள்வதற்காகவும் உதவி கேட்கலாம். எப்படியோ சகோதரத்தால் விரயங்கள் ஏற்படும் அமைப்பு உண்டு.

மேலும் 12 ஆம் இடத்தில் சுக்ரனும், குருவும் வீற்றிருக்கிறார்கள். எனவே வாழ்க்கைத்துணை வழியே பிரச்சினைகள் உருவாகி மறையும். இட மாற்றம், வீடு மாற்றங்கள் இயல்பாக வந்து சேரும். அந்நிய தேசத்திலிருந்து வரும் தகவல் ஆச்சரியப்பட வைக்கும். ஏழரைச் சனி முற்றிலுமாக விலகி விட்டதால் அருகிலிருக்கும் ஆலயங்களுக்குச் சென்று சனி பகவானை வழிபடுவதோடு, சிறப்பு ஸ்தலங்களுக்கும் சென்று சனி பகவானை வழிபட்டுவந்தால் வாழ்க்கைப் பாதையில் வளர்ச்சி கூடும். தளர்ச்சி அகலும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஒக்டோபர் 26 ஆம் திகதி துலாம் ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 27 ஆம் திகதி முதல் அஸ்தமனம் அடைகிறார்.

எனவே முதல் ஒருவார காலத்திற்கு புதன் நற்பலன்களைக் கொடுத்தாலும், அது வலிமை இழப்பதால் பணப்பற்றாக்குறை உருவாகலாம். மாமன், மைத்துனர் வழியில் மனக் கசப்புகள் ஏற்படலாம்.

உறவினர் பகை அதிகரிக்கும். தொழிலில் மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள், மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். நவம்பர் 12 ஆம் திகதி விருச்சிகத்திற்கு புதன் மாறுகிறார். இதன்

## வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும்

விளைவாக மாதக் கடைசியில் நற்பலன்களை எதிர்பார்க்க முடியும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேரலாம். என்ன இருந்தாலும் சர்ப்பக் கிரகம் உங்கள் ராசியில் இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்து கொள்வதே நல்லது.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் நவம்பர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் நீச்சம் பெறுகிறார். தனாதிபதி நீச்சம் பெறுவதால் பற்றாக்குறை பட்ஜெட் உருவாகலாம். பண்டிகை காலத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். தொடங்கிய பணிகள் பாதியில் நிற்கும். கடன் சுமை அதிகரிக்கும். தந்தை வழியில் வந்த பூர்வீக சொத்துக்களை விற்க முடிவெடுப்பீர்கள்.




தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைப்பது அரிது.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

நவம்பர் 5 ஆம் திகதி கன்னி ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமாதிபதி உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது எதிரிகள் தொல்லை அதிகரிக்கலாம். எதிர்பாராத விதத்தில் இழப்புகள் உருவாகலாம். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வாய்ப்புகளை உபயோகப்ப டுத்திக் கொள்ள முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். இம்மாதம் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். நவரா த்திரி விழாவில் பராசக்தியை வழிபடுவதன் மூலம் பலவித நற்பலன்களைப் பெறலாம்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் கூடுதல் விரயங்களை சந்திக்கும் மாதமாகும். குழந்தைகளாலும்விரயம்உண்டு. குடும்ப உறுப்பினர்களாலும் விரயம் உண்டு.

கடந்த சில மாதங்களாக சேமித்த சேமிப்பு இப்பொழுது கரையும். இடம், பூமி உங்கள் பெயரில் வாங்குவதற்கான அறிகுறிகள் தோன்றும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே விருப்பங்கள் நிறை வேறும். நவம்பர் 5 ஆம் திக திக்கு மேல் விழிப்புணர்ச்சி கூடுதலாக இருந்தால் தான் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும். வார வழிபாடாக செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# கண்ணன் செய்த குறும்பு!

அன்று தீபாவளி.

காலையிலிந்தே கண்ணன் மிகவும் சந்தோஷமாக இருந்தான்.

புதுச்சட்டை, புதுபேண்ட் அணிந்து நண்பர்கள் மத்தியில் வலம் வந்தான்.

அவனிடம் இருக்கும் பட்டாசுகளை அவனுடைய நண்பர்களுக்கும் கொடுத்து அவர்களை வெடிக்கச் செய்து மகிழ்வான்.

அதனாலேயே அவனைச் சுற்றி அன்று முழுதும் நண்பர் கூட்டமே இரு க்கும்.

அன்றும் அப்படித்தான்.

நண்பர்களோடு சேர்ந்து கொண்டு வீதியில் பட்டாசுகளை வெடித்து போவோர் வருவோரை பயமுறுத்தி மகிழ்ந்தான்.

அவன் பட்டாசு வெடிக்கும்போது அந்த சத்தம் கேட்டு வயதானவர்கள் புலம்புவதை அவன் சுற்றும் காது கொடுத்து கவனிக்க மாட்டான்.

சில நேரங்களில் வெறும் காகித த்தை மட்டும் பட்டாசு போல் சுற்றி வைத்து வத்தியில் நெருப்பு வைப்பதுபோல் பாசாங்கு செய்வான்.

உண்மையிலேயே அவன் பட்டாசு தான் கொளுத்து கின்றானோ என் றெண்ணி வீதியின் இரண்டு பக்கமும் காதுகளையும் கண்களையும் இறுக மூடி நிற்பதைக் கண்டு கேலி செய்து குலுங் கக் குலுங்கச் சிரிப்பான்.

அவனுடன் அவனுடைய நண்பர்க ளும் சேர்ந்து சிரிப்பார்கள்.

அப்போது அவர்கள் அவனைத் திட்டிவிட்டுப் போவார்கள். அவன் அதையும் ரசித்துச் சிரிப்பான்.

அவன் செய்யும் குறும்புகளை அவனுடைய அம்மா அகிலாண்டத்திடம் யாராவது முறையிட்டால் அவள், ஒரே பிள்ளை என்று செல்ல மாக வளர்த்துவிட்டேன். நான் கண்டிக்கி றேன் என்று அப்போதைக்கு சொல் லிச் சமாளிப்பாள்.

அவள் சொல்லும் வார்த்தைகளை அவன் கேட்கவே மாட்டான்.

வெளிநாட்டில் இருக்கும் அவனுடைய தந்தை அவனுக்கு எந்த குறையும் இல்லாமல் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுத்து முரட்டுப் பையனாக வளர்க்கச் செய்துவிட்டார்.

அவன் கொட்டாங்குச்சியில் ஒளித்து வைத்து வெடித்த யானை வெடி அந்தக் கொட்டாங்குச்சியைச் சுக்கு நூறாக்கிச் சிதறச் செய்தது.

யார் சொல்லையும் அவன் கேட்க மாட்டான் என்பதைத் தெரிந்து கொண்ட வழிப் போக்கர்கள் ஒதுங்கியே போயினர்.

அவனுடைய தாய்க்கு அவனைத் திருத்த வழி தெரியாமல் இருந்தாள்.

காலையிலிருந்து இப்படியும் அப்படியும் ஓடி ஓடி பட்டாசுகளைக் கொளுத்தியதில் சோர்ந்துபோன கண்ணன் தன் நண்பர்களுடன் எதிர் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். ஏதோதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய கண்களில் சட்டென அவனுடைய வீட்டு நாய் பட்டது. சுற்றிலும் கேட்ட வெடிச் சத்தத்தால் மிர ண்டுபோய் கதவிடுக்கு வழியாக சாலையைப் பார்த்தபடி படு த்திருந்தது அந்த நாய்.

யார் வந்தாலும் குரைக்காமல் சோம்பேறி யாய்ப் படுத்திருக்கும் அந்த நாயை அவன் எப்பொழுமே அடித்துத் துன்புறுத்துவது வழக்கம். மூன்று வேளையும் சாப்பிட்டு விட்டு பேசாமல் படுத்திருக்கும் அந்த நாயை எப்படியாவது விரட்டிவிட வேண்டுமென்று அவன் பலமுறை முயற்சி செய்துள்ளான்.

தூரமாக இழுத்துப்போய் மூன்று நான்கு கிராமங்கள் தாண்டி விட்டு விட்டு வந்தாலும்கூட எப்படியோ வீடு தேடி திரும்பி வந்து விடும்.

இன்று அவனுக்குத் தன் நாயைப் பார்த்தவுடன் புதிய திட்டம் உதயமானது.

டேய் ஒரு ஐடியா. நான் மெல்ல எங்கள் வீட்டு நாயை அழைத்து ஏதாவது சாப்பிடச் செய்கிறேன். அந்த நேரத்தில் அதோ தெரிகிறதே உடைந்து போன தகரடப்பா. அதை எடுத்து வந்த நாயின் இடுப்பில் ஒரு கயிற் றைச் சுற்றிக் கட்டிவிடுவோம். பாலு நீ இந்த பட்டாசை கொளுத்தி வெடிக்கச் செய். சத்தம் கேட்டதும் நாய் கண்மண் தெரியாமல் எங் காவது ஓடிப் போய் விடும் என்றான்.

நண்பர்களும் ஒப்புக் கொண்டனர்.

தகரடப்பாவை எடுத்து வர ரகு போய் விட்டான்.

கண்ணன் தன் வீட்டு நாயை அழை த்தான். அது வாலை ஆட்டிக் கொண்டே வந்து அவனிடம் நின்றது.

தன் கையில் வைத்தி ருந்த இனிப் புப் பலகாரத்தை கண்ணன் அதன் வாய்க்கருகில் போட்டான். நாயும் வாலை ஆட்டிக் கொண்டே தின்ன ஆரம்பித்தது.

ஓசைப்படாமல் ரகு கொண்டு வந்து தந்த தகரடப்பாவை அருகில் கிடந்த சணல் கயிற்றில் கட்டி நாயின் வயிற்றுப் பகுதியில் ஒரு சுற்றுச் சுற்றிக் கட்டிவிட்டான்.

(தொடரும்)




கிமு 4004 - அங்கிலிக்கப் பேராயர் ஜேம்ஸ் உச்சரின் கணிப்பின் படி அகிலம் படைக்கப்பட்டது.

கிமு 42 - மார்க் அந்தோனி, ஆகுஸ்டஸ் ரோமப் பேரரசன் புரூட்டசின் இராணுவத்தை தோற்கடித்தனர். இறுதியில் புரூட்டஸ் தற்கொலை செய்து கொண்டான்.

425 - மூன்றாம் வலன்டீனியன் ஆறாவது அகவையில் ரோமப் பேரரசன் ஆனான்.

1157 - டென்மார்க்கில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. மன்னன் மூன்றாம் சுவெயின் கொல்லப்பட்டு முதலாம் வால்டிமார் அரசனானான்.

1707 - பெரிய பிரித்தானியாவின் முதல் நாடாளுமன்றம் கூடியது.

1739 - பிரித்தானியப் பிரதமர் ரொபேர்ட் வால்போல் ஸ்பெயின் மீது போரை அறிவித்தார்.

1870 - பிரான்சின் மெட்ஸ் என்ற இடத்தில் 'இடம்பெற்ற இறுதிப் போரில் பிரஷ்யா வெற்றியடைந்தது.

1906 - அல்பேர்ட்டோ சாண்டோஸ்-டூமொண்ட் பாரிஸ் நகரில் ஐரோப்பாவின் முதலாவது காற்றை விடப் பாரமான வானூர்தியைப் பறக்க விட்டார்.

1911 - முதற்தடவையாக வானூர்தி ஒன்று போரில் பாவிக்கப்பட்டது: இத்தாலிய வானோடி லிபியாவில் இருந்து புறப்பட்டு துருக்கிய இராணுவ நிலைகளை அவதானித்தான்.

1912 - முதலாம் பால்க்கன் போர்: சேர்பியாவுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.

1915 - நியூயோர்க் நகரில் 25,000-33,000 பெண்கள் வாக்குரிமை கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1917 - லெனின் அக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

1941 - உக்ரேனின் ஒடேசா நகரில் 19,000 யூதர்கள், ருமேனிய இராணுவ அதிகாரி நிக்கலாய் டெலியானு தலைமையில் ருமேனியா மற்றும் ஜெர்மன் படையினரால் உயிருடன் எரிக்கப்பட்டனர். அடுத்த நாள் மேலும் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.

1942 - ஐக்கிய அமெரிக்க வான்படையின் தாக்குதலுக்கு அமெரிக்கப் பயணிகள் விமானம் ஒன்று இலக்கானதில் அதில் பயணம் செய்த அனைத்துப் 12 பேரும் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் ரால்ஃப் ரைஞ்சர் என்ற பிரபலமான இசை மேதையும் அடங்குவார்.

1944 - இரண்டாம் உலகப் போர்: மிகப்பெரும் கடற்படைப் போர் பிலிப்பீன்சில் ஆரம்பமாயிற்று.

1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத்தின் செம்படைகள் ஹங்கேரியை அடைந்தன.

1946 - ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதலாவது கூட்டத்தொடர் நியூயோர்க் நகரில் ஆரம்பமாயிற்று.

1956 - ஹங்கேரியப் புரட்சி, 1956: ஹங்கேரியில் பல்லாயிரக்கணக்கானோர் அரசுக்கு எதிராகவும் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராட்டம் நடத்தினர். ஹங் கேரியப் புரட்சி நவம்பர் 4இல் நசுக்கப்பட்டது.

1958 - நோவா ஸ்கோசியாவில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 174 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் சிக்கினர். இவர்களில் 100 பேர் மட்டும் நவம்பர் 1 வரையில் மீட்கப்பட்டனர்.

1966 - ஐக்கிய நாடுகள் சபை மைய மண்டபத்தில் எம். எஸ். சுப்புலட்சுமியின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

1973 - சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்ற யோம் கிப்பூர் போர் ஐநாவின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்தது.

1983 - லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 241 அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டனர். அதே நாளில் இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் பிரெஞ்சு இராணுவத்தினர் 58 பேர் கொல்லப்பட்டனர்.

1989 - கம்யூனிச ஹங்கேரியன் மக்கள் குடியரசு, ஹங்கேரியன் குடியரசு எனப் பெயர் மாற்றப்பட்டது.

1991 - ஈழப்போர்: தமிழீழப் போரில் அநாதைகளான பெண் பிள்ளைகளின் மறுவாழ்வுக்காக செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

1998 - இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டனியாகு மற்றும் பாலஸ்தீன தலைவர் யாசர் அரபாத்துக்கும் இடையில் "அமைதிக்காக நிலம்" என்ற உடன்பாடு எட்டப்பட்டது.

2001 - வட அயர்லாந்தில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்களின் பின்னர் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதக் களைவில் ஈடுபட்டது.

2001 - அப்பிள் நிறுவனத்தின் ஐப்பொட் வெளியிடப்பட்டது.

2001 - காஷ்மீர் விமானத் தளத்தைத் தகர்க்கும் தீவிரவாதிகளின் தற்கொலைப் படைமுயற்சி முறியடிக்கப்பட்டது. 4 தீவிரவாதிகள் மற்றும் ஒரு ராணுவ வீரர் கொல்லப்பட்டனர்.

2002 - மொஸ்கோவில் நாடக அரங்கு ஒன்றில் செச்சினிய தீவிரவாதிகளினால் 700 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

2004 - பிரேசில் ஏஎஸ்-30 என்ற தனது முதலாவது விண்கப்பலை விண்ணுக்கு ஏவியது.

2004 - வடக்கு ஜப்பானில் நிலநடுக்கம் தாக்கியதில் 35 பேர் கொல்லப்பட்டு 2,200 பேர் படுகாயமடைந்தனர்.

2006 - இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

பிறப்புக்கள்

1920 - ஃபுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (இ. 1998)

1948 - எம். எச். எம். அஷ்ரப், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தாபகர் (இ. 2000)

1974 - அரவிந்த் அடிகா, இந்தியப் புதின எழுத்தாளர்

இறப்புகள்

கிமு 42 - மார்க்கஸ் புரூட்டஸ், ரோமப் பேரரசின் படைத்தலைவன் (பி. கிமு 85)

1986 - எட்வேர்ட் அடெல்பேர்ட் டொய்சி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்கள் நினைவாக

# வடக்கில் 5 இலட்சம் மரக்கன்றுகள் கார்த்திகையில் நடுவதற்குத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

**போரில் உயிர்துறந்த மாவீரர்களின் நினைவகத் தமிழ் மக்கள் கண்ணீர் உருகும் மாதமான கார்த்திகை மாதத்தில் 5 இலட்சம் மரக்கன்றுகளை நாட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

ஆளுக்கொரு மரம் நடுவோம், நாளுக்கொரு வரம் பெறுவோம் என்ற மகுட வாசகத்துடனும் ஐந்து மாவட்டங்களில் 5இலட்சம் மரக்கன்றுகள் எனும் தொனிப்பொருளிலான மேற்படி மரநடுகைத் திட்டம் எதிர்வரும் முதலாம் திகதியன்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாண மரநடுகை மாதமான கார்த்திகை மாதம் முதலாம் திகதி தொடங்கி முப்பதாம் திகதி வரையான காலப்பகுதியில் வடக்கில் ஐந்து இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குத் திட்டம் இடப்பட்டுள்ளது.

வடக்கில் மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்கு மிகப்பொருத்தமான மாதமாகக் கார்த்திகை மாதமே உள்ளது. கார் என்பது மழையைக் குறிக்கும். அந்தவகையில், மழையின் பெயரைத் தன் பெயரில் கொண்டிருக்கும் கார்த்திகை மாதத்திலேயே வடக்கில் கூடுதலான மழைவீழ்ச்சி கிடைக்கிறது.

தமிழர்களின் வாழ்வியலில் கார்த்திகை ஒரு புனிதமான மாதமாகக் கருதப்படுகிறது. வீடுகள் தோறும் விளக்கேற்றி வழிபடும் திருநாள் இம்மாதத்திலேயே அடங்குகிறது. மழைத்தண்ணீரால் நனையும் மாதமாக மாத்திரம் அல்லாமல் தமிழ் மக்களின் கண்ணீரால் நனையும் மாதமாகவும் கார்த்திகை உள்ளது. போரில் உயிர் துறந்த மாவீரர்களின் கூட்டு நினைவாகத் தமிழ் மக்கள் கண்ணீர் உருக்கும் நாட்களும் இம்மாதத்தினுள்ளேயே அடங்குகின்றன.

மரங்களை வணங்குகின்ற தொன்மையான வழிபாட்டைக்கொண்ட நாங்கள், மரணித்தவர்களின் நினைவாக மரங்களை நாட்டி வைக்கும் மாண்பையும் கொண்டிருக்கிறோம். இவற்றின் அடிப்படையிலேயே கார்த்திகை மாதத்தை வடமாகாண மரநடுகை மாதமாகப் பிரகடனம் செய்து, 'ஆளுக்கொரு மரம் நடுவோம், நாளுக்கொரு வரம் பெறுவோம்' என்ற மகுட வாசகத்துடன் கடந்த ஆண்டில் இருந்து கடைப்பிடித்து வருகிறோம்.

இந்த ஆண்டு மரநடுகை மாதத்தில் 5 இலட்சம் மரக்கன்றுகளை நடவேண்டும் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். அவரது கோரிக்கைக்கு அமைவாக 'ஐந்து மாவட்டங்கள், ஐந்து இலட்சம் மரக்கன்றுகள் என்பதை இந்த ஆண்டின் கருப்பொருளாகக் கொண்டு 5 இலட்சம் மரங்களை நடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். நிழல் மரங்கள், வர்த்தகப் பெறுமதியான மரங்கள், பழமரங்கள், பனை விதைகள் போன்றவற்றை ஐந்து மாவட்டங்களிலும் நாட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பனைமரத் தோப்புகளை உருவாக்கும் நோக்கில் குறித்த இடைவெளிகளில் பனம் விதைகளை ஊன்றவுள்ளோம். வெற்றுக் காணிகளின் உரிமையாளர்கள் அனுமதித்தால் அங்கும் மரங்களை நடுகை செய்துகொடுப்பதற்கும் நாம் தயாராக உள்ளோம்.

வடக்கைப் பசுமை யாக்கும் இந்தப் புனித காரியத்தில் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகள், மாதர் அமைப்புகள், ஆலயங்கள் ஆகியவற்றையும் எங்களுடன்கைகோர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கார்த்திகை 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் மாவீரர் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-4)



நவராத்திரி கால விசேட இறுதி நிகழ்வான விஜயதசமியின் மானம்பூ உற்சவம் நேற்றைய தினம் நல்லூரில் சிறப்பாக இடம்பெற்ற போது... (படங்கள்:- உமாசுதன்)

## கூட்டுறவு தின விழாவும் கட்டடத் திறப்பு விழாவும்

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் 93 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும் கட்டடத் திறப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தாவடியில் அமைந்துள்ள உற்பத்தி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவுச் சங்கத் தலைவர் சை.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்தி தலைவர் எஸ்.கோகுலதாசன், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார், வடமாகாண பனை -தென்னை வள கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் நா.கணேசன், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## வர யக்ஞம்

ஏகத்துவ பல்கலைக்கழகத்தின் ஏற்றமிகு சிருஷ்டி கர்த்தாக்களாகத் திகழும் ஸ்ரீகல்கி பகவதி பகவான் கனிவோடு அருளிடும் வர யக்ஞம் பயிற்சி எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இப்பயிற்சி நடைபெறவுள்ளது.

மனிதன் இந்த உலகத்தில் இருந்து கொண்டு தன்னைத் தானே பார்த்து அனுபவித்து ஏற்றுக் கொண்டு தவறு மேல் தவறு செய்யாமல் வெற்றியடைய அமைதியாக ஆனந்தமாக வாழ வழி காட்டும் பயிற்சியாக அமையவுள்ளது. இப் பயிற்சி மூலம் ஐஸ்வர்யப்பிராப்தி, ஆரோக்கியப்பிராப்தி, குடும்ப ஷேமம், கர்ம விமோசனம் ஆத்மஞானம், தெய்வீக அனுபவம், நவவித முக்தி என்பவற்றைப் பெற்று ஸ்ரீகல்கி பகவதி பகவானிடம் அனுக்கிரகமாக வாழ்வில் சகல சௌபாக்கியங்களை பெற்றுக்கொள்ள முடியும். (இ-5)

## மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் கவுன்சில் யாழ். கிளை அனுசரணையுடன் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தை ஒரு பாடமாக தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள் யாழ்ப்பாணம் றக்கா வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கவுன்சில் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து தொடர்பு கொள்ளமுடியும் என்பதுடன் 021 752 1521 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




## போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் கிளை நூலகத்தால் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதற்கமைய தரம் 1 தொடக்கம் தரம் 2 வரையான மாணவர்களுக்கு வர்ணம் தீட்டுதல், தரம் 3 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு சித்திரம் வரைதல், தரம் 3 காலைக் காட்சி, தரம்- 4 தென்னந் தோட்டம், தரம் 5 - பூந்தோட்டம் என்பனவற்றை சித்திரமாக வரைதல்வேண்டும். தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான கட்டுரைப்போட்டி இடம்பெறும். (இ-5)

## கவிதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார விழாவையொட்டி விழாக்கு முவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவிதைப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டி பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிக் கொள்ள முடியும் என்பதுடன் இலங்கையின் எப்பாகத்திலுள்ளவர்களும் கலந்து கொள்ள முடியும். தாயினும்மேலான மற்றும் "நில் கவனி முன்னேறு" ஆகிய தலைப்புக்களில் ஏதாவது- ஒரு விரும்பிய தலைப்பில் 25 வரிகளுக் குட்பட்டதாக கவிதை எழுதப்படல் வேண்டும். எழுதப்பட்ட கவிதைகள் எழுதிய மாணவர்களினாலே வாசித்துக் காட்டப்படும் போட்டியாகவே நடைபெறவுள்ளது.

எழுதப்படும் கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம் என போட்டியாளர் ஏற்பாட்டுக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## குடும்பப் பெண் கடத்தல் விவகாரம் 11-வது சந்தேக நபருக்கும் மறியல்

(கரணவாய்)

வடமராட்சி வல்வெட்டித்துறை கம்பர்மலையில் குடும்பப் பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய 11 ஆவது சந்தேக நபரை நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா நேற்று முன்தினம் புதன் கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதியன்று பருத்தித்துறை நீதிமன்றம் சென்று விட்டு திரும்பிய மேற்படி குடும்பப் பெண் கம்பர் மலைப் பகுதியில் வைத்து 8 பேர் குழுவினரால் ஹயஸ் வாகனம் ஒன்றில் கடத்தப்பட்டார்.

இக் கடத்தல் தொடர்பில் இப் பெண்ணின் கணவர் 9 ஆவது நபராக கைது செய்யப்பட்டிருந்த நிலையில் 10 ஆவது நபரும் வல் வெட்டித்துறைப் பொலிஸாரினால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். பெண்ணின் கணவர் உட்பட 10 சந்தேக நபர்களும் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலே பதினொராவது சந்தேகநபர் நேற்று முன்தினம் சட்டத்தரணி ஊடாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் சரணடைந்தார்.

இதற்கமையவே மேற்படி நபர் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரத் தொடர்புகளே இலக்கியத்தின் எதிர் காலத்தையும் தீர்மானிக்கவல்லன.
-டி.எஸ்.எலியட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கை முன்னேற்ற நீதிக்கான குழு அமைய வேண்டும்

இந்திய தேசத்தின் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் திடீர் விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பற்றி தெரிவித்த கருத்துக்கள் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சரிடம் கேள்வி கேட்போருக்கு இனிமேலாவது நல்லறிவைக் கொடுக்கும் என நம்பலாம்.

இருந்தும் செக்கும் சிவலிங்கமும் சிலருக்கு ஒன்றாகத் தெரிகின்ற நிலைமைகளும் இருப்பதால், தேர்தல் காலங்களில் தமிழ் மக்கள் சரியானவர்களை இனம் காண்பதன் மூலமே எல்லாவற்றுக்கும் முடிவு கட்ட முடியும்.

அதிலும் குறிப்பாக தமிழர் அரசு என்று புகழக் கூடிய வடக்கு மாகாண அரசில் இருந்து கொண்டு, மாகாண அரசின் இயங்குநிலைக்கு தடையாக இருப்பவர்கள்-கொழும்புத் தமிழ்த் தலைமையின் விசுவாசத்துக்காக சபையைக் குழப்புவோர், இவர்களுக்கு நிச்சயம் தமிழ் மக்கள் பாடம் புகட்ட வேண்டும் என்பதையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டி இட்டால் தங்களுக்கு வெற்றி என்று நினைக்கிற சூழமைவை மாற்றியமைக்காத வரை தமிழ் மக்களின் வாக்குகளை வெற்று விட்டு எல்லாவற்றையும் குழப்புகின்றவர்கள் இருக்கவே செய்வர்.

எனவே இதற்கு எல்லாம் முடிவு கட்டப்பட வேண்டும். அதேநேரம் வடக்கு மாகாண சபையின் இயங்கு நிலையை ஒழுங்குபடுத்தவும் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாக இருந்து கொண்டு வடக்கு மாகாண அரசின் செயற்பாட்டுக்கு தடையாக இருக்கின்றவர்கள், சட்டத்தை மதியாது நடந்து கொள்கின்றவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவும் பொதுமக்களுக்கு உண்மை நிலையைத் தெரிவிக்கவும் நீதியான குழு ஒன்று அமைக்கப்படுவது அவசியமாகும்.

பல்கலைக்கழக புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், சட்டவாளர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து அந்தக் குழு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கவும் அபிவிருத்தித் திட்டங்களை முன்மொழிந்து அவற்றை நடைமுறைப்படுத்தவும் ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் தமிழர் அரசு தனது மக்களின் தேவைகளை நிறைவு செய்து கொடுக்க முடியும்.

இருந்தும் நீதிக்கான குழு அமைத்தல் என்ற விடயத்தில் சிலர் ஒத்துப் போகாமல் இருக்கலாம். ஆனால் ஒரு நாடு, ஒரு பிரதேசம் முன்னேற்றம் அடைய வேண்டுமாயின் நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லும் பலமான திட்டமிடல் குழுக்கள் இருப்பது அவசியம்.

ஆட்சிகள், அரசுகள் மாறினாலும் திட்டமிடல் குழுக்களின் முன்மொழிவுகளும் பரிந்துரைகளுமே அமுலாகிக் கொண்டிருக்கும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக எங்கள் வடக்கு மாகாணத்தின் நீதிக்கான அமையம் அமைக்கப் படாமல் போயிற்று.

இத்தகைய குறைபாட்டின் காரணமாக வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய ஒரு சில உறுப்பினர்கள், மக்களின் வாக்குகளால் தாங்கள் உறுப்பினராகியதை மறந்து கட்சித் தலைமைக்கு விசுவாசமாக நடந்தால் அது அடுத்த முறைக்கும் தமக்கு ஆசனத்தைத் தரும் எனக் கருதுகின்றனர்.

எனவே கட்சித் தலைமைகள் அல்ல; மக்களின் வாக்குகளே! உறுப்பினர் பதவியைத் தருவது என்ற நிலையை ஏற்படுத்த பொது மக்கள் தயாராக வேண்டும். அதேசமயம் பொது மக்களை விழிப்படையச் செய்யும் பணியை நீதிக்கான குழு மேற்கொள்வதும் அவசியம்.

அப்போதுதான் நாம் தமிழர் என்ற உணர்வோடு -நன்றி நினைப்போடு-எங்கள் மண் என்ற பாசத்தோடு அனைத்து வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படும். வெற்றியும் அடையப்படும்.

## சிப்பாய் கைது

காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணிபுரியும் கடற்படை சிப்பாய் ஒருவர் ஆனமடுவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவி ஒருவருக்கு தனது மர்ம பிரதேசத்தை காட்டியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்த கடற்படை சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும 33 வயதான இந்த கடற்படை சிப்பாய் விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்தாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

13 வயதான பாடசாலை மாணவி பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, சந்தேகநபர் தனது ஆடைகளை அவிழ்த்து காட்டியதாக மாணவி தனது பெற்றோரிடம் கூறியுள்ளதுடன் அவர்கள சம்பவம் குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனடிப்படையில், சந்தேக நபரை கைது செய்துள்ள பொலிஸார் அவரை புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜரப்படுத்தவுள்ளனர். (எ-11)

## ஜனாதிபதி மாளிகையிலுள்ள நிலக்கீழ் சொகுசு மாளிகைக்கு மின் கட்டணம் 30 இலட்சம்!

கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் அதிசொகுசு நிலக்கீழ் மாளிகையொன்று அமைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கப்படுத்தியுள்ளார்.

சுற்றாடல் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றுக்காக வருகை தந்திருந்த பாடசாலை மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த உண்மையைப் போட்டுடைத்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையை பார்வையிடும்போது நிலக்கீழ் சொகுசு மாளிகையையும்பார்வையிட மறக்க வேணடாம் என்றும் அவர் மாணவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலக்கீழ் மாளிகைக்கு 24 மணிநேரமும் துண்டிக்கப்பட முடியாத வகையில் ஏ.சி. வசதி செய்யப்பட்டுள்ளது. இதனை ராஜபக்ஷவினரே நிர்மாணித்துள்ளனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி மாளிகையின் மாதாந்த மின கட்டணம் ஒன்றரைக் கோடி செலவாகின்றது. அதில் நிலக்கீழ் மாளிகையின் மின் செலவு மட்டுமே முப்பது லட்சம் செலவாகின்றது.

இதன் காரணமாகவே நான் வேறொரு சாதாரண வீட்டை உத்தியோகபூர்வ இல்லமாக பயன்படுத்துகின்றேன். எனது தற்போதைய இல்லத்தின் மொத்த பராமரிப்புச் செலவே மாதாந்தம் ஐந்து லட்சம் மட்டுமே என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (எ-11)

## பசிலின் மனு மீதான விசாரணை ஜூன்-14

(கொழும்பு)

நிதி மோசடி விசாரணைப பிரிவு தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைத்திருந்தமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் திகதியை அறிவித துள்ளது.

இதன்படி மனுதொடரபான விசாரணை அடுத்த வருடம் ஜூன் மாதம் 14 ஆம் திகதி நடததப்படும் என ஈவா வனசுந்தர தலைமையிலான நீதியரசர்கள் குழு அறிவித்துள்ளது. (எ-11)

## கேரள கஞ்சாவுடன் இருவர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் 60 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய கேரள கஞ்சாவுடன் இரண்டு நபர்கள் கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொடிகாமம் மிருசுவில் பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்றில் இருந்து 28 கிலோ கிராம் கேரள கஞ்சாவை கைப்பற்றியதுடன் முச்சக்கர வண்டியில் இருந்த இரண்டு நபர்களையும் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட இரண்டு நபர்களும் தொண்டைமானாறு பகுதியை சேர்ந்தவர்கள் என விசாரணையின் போது தெரியவந்துள்ளது. (எ-9)

## பாடசாலை சேவை வாகனங்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக யாழ். மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் அனைத்துத் தனியார் வாகனங்களும் யாழ்.மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட உளசமூக அதிகாரி பூ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் சில பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்ற துஷ்பிரயோகங்களை முற்றாகத் தடுப்பதற்கும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக பாடசாலை சேவையில் ஈடுபடுகின்ற அனைத்து வாகனங்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பாடசாலை சேவையில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டிகள், பேருந்துகள், ஹயஸ் வாகனங்கள் என்பவற்றை எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து யாழ்.மாவட்ட செயலக மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்யப்படவுள்ளன.

குறித்த நாட்களுக்கு பின்னர் பதிவுகளை மேற்கொள்ளாத வாகன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### பெண் குழந்தை முக்கியம்

★ பெரியோர்களுக்கு கண்ணியம் கொடுக்காதவரும், சிறியோர் மீது இரக்கம் கொள்ளாதவரும் எம்மைச் சேர்ந்தவரல்ல.

★ பெண் குழந்தையை விட, ஆண் குழந்தைக்கு முதன்மை அந்தஸ்து கொடுக்காமல் இருக்கும் ஒருவரை நிச்சயம் அல்லாஹ் சொரக்கத்தில் நுழைய வைப்பான்.

★ தன்னுடைய வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவனும் எல் லாச் செயல்களிலும் நடுவுநிலையைக் கைக்கொள்பவனும் நிச்சயம் ஏழ்மை அடைய மாட்டான்.

★ உங்களை விட கீழ் நிலைமையில் இருப்பவர்களைப் பாருங்கள். உங்களுக்கு மேலான நிலையில் உள்ளவர்களைப் பார்க்காதீர்கள்.

★ செல்வச் செழிப்போடு வாழும் போது நீ இறைவனை நினைத்தால் நீ துன்பம் அடையும்போது இறைவன் உன்னை நினைப்பான்.

★ தற்செயலாக குவிந்து விட்ட பொருள் யாவும் செல்வமில்லை. ஆன்மிகச் செல்வமே செல்வம்.

★ நீங்கள் கற்புடையவர்களாக இருங்கள். உங்கள் மனைவியரும் கற்புடையவர்களாக இருப்பார்கள்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நிகழ்ச்சிகளை வென்று சமாளித்தல்

நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதுதான் வாழ்க்கையில் எல்லாப் பிரச்சினைகளையும் நீங்கள் எதிர் கொள்ளக் காரணமாகும். நீங்கள் பிரச்சினைகளுக்கு முன் சிறியவர்களாக இருக்கும் அதே வேளையில் நிகழ்ச்சிகள் பெரிதாகிப் போகின்றன.

உதாரணமாக போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையில் நீங்கள் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றுகொண்டிருக்கிறீர்கள் உங்களுக்கு முன் செல்லும் ஒரு வாகனம் அதிகமாய் புகையைக் கக்கிக் கொண்டு செல்கிறது நீங்கள் என்ன செய்வீர்கள்?

உங்களுக்கு மூன்று விருப்ப வழிகள் உள்ளன.

1.நீங்கள் குறை கூறிக் கொண்டு அதைப் பொறுத்துக் கொண்டு அவ்வாகனத்தைப் பின் தொடர்ந்து செல்லக் கூடும்.

2.நீங்கள் செல்லும் வேகத்தைக் குறைத்து கொள்ளக் கூடும் அல்லது வாகனம் வெகுதூரம் செல்லும் வரை நீங்கள் காத்திருக்கக் கூடும்.

3. நீங்கள் உங்கள் திறமையைப் பயன்படுத்தி வாகனத்தை முந்திச் சென்று அதை மறந்து விடலாம்.

முதல் வழியில் உங்களில் பெரும்பாலோர் இப்படித்தான் நிகழ்ச்சியோடு உங்களைப் பிணைத்துக்கொண்டு துன்பப்படுகிறீர்கள். பயம் முழுவதும் கரும்புகையைச் சுவாசித்துக்கொண்டு துன்பப்படுவதைப் போன்று.

இரண்டில்: நிரந்தரமான ஒரு நிவாரணம் உங்களுக்குக் கிடைக்காது. ஏனென்றால் வேறொரு பெரிய வாகனம் உங்கள் முன் வரலாம். நிகழ்ச்சியைவிட்டு ஓடிப்போவது ஒரு நிரந்தரமான தீர்வாகாது.

மூன்றாவதில் விவேகம் உள்ளவர்கள் தங்களின் திறமையைப் பயன்படுத்தி நிகழ்ச்சிகளைச் சமாளித்து வெற்றி காண்கிறார்கள். வாகனம் நல்ல நிலையில் இருந்தால் நீங்கள் உபயோகிக்கும் திறன் பலனை அளிக்கும்.

வாகனத்தை (நம்மை) நல்ல நிலையில் வைத்திருப்பது **சாதனா** பயிற்சி திறமை என்பது குருவின் அருள்.

கடந்த காலத்தில் நீங்கள் செய்திருக்கிற தவறுகள் இப்போது உங்களைப் பணிவுள்ளவர்களாக ஆக்கியுள்ளன. பணிவுள்ளவர்களாக அவதற்கு நீங்கள் எதிர்காலத்தில் தவறுகளைச் செய்யத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டம்



## அடுத்த சுற்றில் வதிரி டயமன்ஸ்

பரபரப்பான ஆட்டத்தில் முல்லைத்தீவு செம்மலை உதயசூரியன் அணியை வெற்றி பெற்று வடமராட்சி வதிரி டயமன்ஸ் அணி அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதி.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் அணிக்கு 7பேர் கொண்ட உதைபந்தாட்டத்தொடரில் நேற்று முன்தினம் 21.10.2015 மாலை 4 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் முல்லைத்தீவு செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து வடமராட்சி வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

இறுதி நிமிடம் வரை விறுவிறுப்பான ஆட்டத்தில் 6-5 என்ற கோல் கணக்கில் வதிரி டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது.

ஒரு கட்டத்தில் முல்லைத்தீவு செம்மலை உதயசூரியன் வெற்றி பெறும் என்ற நிலையில் இதனை எதிர்கொண்டு அடுத்து அடுத்து கோல்களை போட்டு வதிரி டயமன்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

அடுத்த சுற்று ஆட்டத்தில் வடமராட்சி உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து வடமராட்சி வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது.(க)



## இன்றைய போட்டிகள்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் மாகாணத்தின் மகுடம் உதைபந்தாட்டப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில்,

வடமராட்சி றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பருத்தித்துறை சென்.சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் ஞான முருகன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.(க)

# அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டம்

## ஆவரங்கால் மத்தி, அச்சுவேலி தோப்பு சம்பியன்



அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், பி பிரிவில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியும் சம்பியனாகின.

குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்ற ஏ பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. சிறந்த வீரராக ஆவரங்கால் மத்திய அணியின் நித்தியானந்தன் தெரிவானர். ஏ பிரிவில் தொடராட்ட நாயகனாக இளவாலை மத்திய அணியின் ஜெகதீசன் தெரிவானார்.

தோப்பு வாலிபர் எதிர் மோகனதாஸ பி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. சிறந்த வீரராக அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியின் வினோதன் தெரிவானார். (க)

# பிரெஞ்ச் ஓபன் பட்மிண்டன் இந்தியாவின் சாய்னா வெற்றி

பிரெஞ்ச் ஓபன் பட்மிண்டன் தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் சாய்னா. காஷ்யப் வெற்றி பெற்றனர். பாரிசில் பிரெஞ்ச் ஓபன் பட்மி ண்டன் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் "நம்பர்-1" வீராங்கனை இந்தியாவின் சாய்னா, தரவரிசையல் 14வது இடத்திலுள்ள கனடாவின் மிக்காலியை சந்தித்தார.

முதல் செட்டை 21-18 என கைப்பற்றிய சாய்னா, அடுத்த செட்டையும் 21-13 என தன்வசப்படுத்தினார். 42 நிமிடங்கள் நீடித்த போட்டியின் முடிவில், சாய்னா 21-18, 21-13 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றொரு முதல் சுற்றில் இந்திய வீரர் காஷ்யப். பிரான்சின் தாமசை எதிர் கொண்டார். முதல் செட்டை 21-11 என வென்ற காஷ்யப், அடுத்த செட்டையும் 22-20 என கைப்பற்றினார். முடிவில், காஷ்யப் 21-11. 22-20 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார். இந்தியாவின் ஸ்ரீகாந்த் 15-21. 21-13, 11-21 என்ற செட் கணக்கில் சீனாவின் டியன் ஹவாயிடம் வீழ்ந்தார்.

பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ஜ்வாலா, அஷ்வினி ஜோடி 21-15, 21-12 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் ஜோங்கல்பன், ரவிந்தா ஜோடியை வீழ்த்தியது. (க)



# அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் யாழ்.மாவட்ட செயலக அணி வசம்



யாழ் .மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்வருடத்திற்கான அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்தினை யாழ் .மாவட்ட செயலக அணியினர் தனதாக்கிக் கொண்டனர். கடந்த திங்கட்கிழமை வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இறுதி நிகழ்வுகளும், வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றதுடன் புலமைப்பரிசிலில் சிறப்பு சித்தியை பெற்ற தீவக மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் உரையாற்றுகையில், பதினைந்து பிரதேச செயலக மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களிடையே நடத்தப்படும் இவ்வெற்றிக் கிண்ண நிகழ்வு ஆறாவது வருடமாகவும் முதன் முறையாக தீவகத்தில் இடம்பெறுகின்றமை சிறப்பான அம்சமாகும்.

மேலும் இப்போட்டி நிகழ்வுகள் அலுவலகங்களிலும் வெளிக்களாங் களிலும் சதா வேலைப்பளுக்களுடன் இயங்கிக் கொண்டிருக்கும் உத்தியோகத் தர்களிடையே புது உணர்வையும், உத்வேகத்தையும் கொடுப்பதோடு உத்தியோகத்தர்களிடையே புரிந்துணர்வையும். ஐக்கியத்தையும் ஏற்படுத்துகின்றது.

விளையாட்டுக் கழகங்களிலே எவ்வித பேதமுமின்றி தோழமை உணர்வோடும், பரஸ்பர மனப்பான்மையோடும் செயற்படுதல் அலுவலகத்திலும் சாதகமான நிலைப்பாட்டை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என தெரிவித்தார். யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில் நந்தனன், யாழ் .மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (க)

## பயிற்சியாளராக சானியா

உத்தர பிரதேசத்தின் இளம் டென்னிஸ்நட்சத்திரங்களுக்கு பயிற்சி தர சானியா மிர்சா சம்மதம் தெரிவித்தார். இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, 28. பெண்கள் இரட்டையர், கலப்பு இரட்டையர் பிரிவுகளில் 5 கோப்பை வென்றுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிசுடன் இணைந்து சமீபத்தில் தொடர்ச்சியாக 4 சர்வதேச தொடர்களில் சம்பியன் பட்டம் கைப்பற்றினார்.

இதனிடையே, உ.பி., முதல்வர் அகிலேஷ் யாதவை, சானியா மிர்சா சந்தித்துப் பேசினார். அப்போது, 'விளையாட்டு வளர்ச்சிக்கு பல்வேறு உதவிகள் செய்வதாக தெரிவித்த முதல்வர் அகிலேஷ், லக்னோவில் கட்டப்பட்டு வரும் புதிய கிரிக்கெட் மற்றும் கால்பந்து மைதானம்' குறித்து பேசினார்.

இதேபோல டென்னிஸ் வளர்ச்சிக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவை யான ஆலோசனைகள், பயிற்சிகள் தருமாறு சானியாவிடம் கேட்டார். இதற்கு சம்மதம் தெரிவித்த சானியா, இளம் நட்சத்திரங்களின் வளர்சசிக்கு தேவையான பயிற்சிகள் தருவது உள்ளிட்ட பல்வேறு உதவிகள் செய்வதாக உறுதி தந்தார்.(க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதி ஒருவரின் நாளாந்த ஹெரோயின் செலவு 30 ஆயிரம்

(கொழும்பு)

மரணதண்டனை பெற்று வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞன் ஒருவர் நாளாந்தம் ஹெரோயினுக்கு 30 ஆயிரம் ரூபா செலவிட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

ஆரம்பத்தில் வெலிக்கட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் அதன்பின் மஹர சிறைக்கு மாற்றப்பட்டார்.

சிறிது காலத்தின் பின் மீண்டும் வெலிக்கடவுக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து குருவிட்ட சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

பெரும் செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த இந்த வாலிபருக்கு வெளிநாட்டு யுவதியொருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தண்டனை விதிக்கப்பட்டது.



மரணதண்டனைக் கைதிகள் பற்றிய ஆய்வொன்றை நடத்தி வரும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் குற்றவியல் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க வெளியிட்ட ஆய்வறிக்கையொன்றிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் கைதிக்கு நாளாந்தம் ஹெரோயின் வாங்குவதற்கான பணத்தை அவரது தாயே ஏற்பாடு செய்து தருவதாகவும் தெரியவருகிறது. (எ-11)

# மீள் ஒளிபரப்புக்கு சனல் 4 ஆவணப்படம்

(கொழும்பு)

இலங்கை தொலைக்காட்சிகளில் சனல் 4 ஊடகத்தினால் இலங்கை தொடர்பில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள ஆவணப்படம் ஒளிபரப்புச் செய்யப்பட வேண்டுமென ஊடகவியலாளர் கலும் மக்ரே கோரியுள்ளார்.

கூடிய விரைவில் நோ பயர் ஸோன் ஆவணப்படத்தை காட்சிப்படுத்துமாறு கோரியுள்ளார்.

ஆவணப்படம் தொடர்பில் மக்ஸ்வெல் பரணகம அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மட்டுமன்றி இலங்கை அரசாங்கமும் ஆவணப்படத்தை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இனியும் இலங்கை தொலைக்காட்சி அலைவரிசைகளில ஆவணப்படத்தை ஒளிபரப்புச்செய்வதனை தாமதிக்கக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கபடாத நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்படுவதன் மூலம் அனைத்து இன சமூகங்களும் நன்மை அடையும் என அவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறிய வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-12)

## வெடிகுண்டு...

வெடிகள் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து உரிமையாளர் சுன்னாகம் பொலிஸாருக்கு தெரியபடுத்தியதை அடுத்து மல்லாகம் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று கண்ணிவெடிகள் மீட்கப்பட்டன. (எ-11)

## ஏற்றுமதி வருவா...

147 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

இது ஒப்பீட்டளவில் கடந்த ஆண்டை விடவும் 3.4 வீத வீழ்ச்சியாகும்.

இதேவேளை இறக்குமதி செலவுகள் கடந்த ஆண்டுக்கும், இந்த ஆண்டுக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் எதுவும் கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான காரணங்கள் இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஜப்பான் பிரதிநிதி...

மொட்டோ, பிரதமருடன் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

நாட்டில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பில் உள்ளூர் பொறிமுறையின் கீழ் விசாரணைகள் செயற்படுத்தவுள்ளமை குறித்து மொட்டோ நொகுச் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். (எ-11)

## சனல் 4 ஆவணப்...

கூறவில்லை எனவும், சனல் 4 ஆவணப்படத்தின் காட்சிகள் தொடர்பில் உண்மையை அறிந்துகொள்ள பொதுவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென தான் பரிந்துரை செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# யுத்த குற்ற விசாரணை மேற்கொள்ள உள்நாட்டுச் சட்டத்தை மாற்ற வேண்டும்

## மக்ஸ்வெல் பரணகம தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் யுத்த குற்றவிசாரணைகளை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் உள்நாட்டின் சட்டங்களை மாற்றவேண்டும் என கருத்து தெரிவித்துள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம, இறுதி யுத்தத்தில் 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை என தங்களது ஆணைக்குழு கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவரது ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அவர் இந்திய ஊடகமொன்றிற்கு கருத்துதெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

ஈழயுத்தத்தின் இறுதி தருணங்களில் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள யுத்தகுற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு உள்நாட்டில் சட்டங்கள் எதுவும் இல்லை. இலங்கையின் குற்றவியல் சட்டத்தை அதற்கு பயன்படுத்த முடியாது.

எனினும் பொருத்தமான சட்டமூலங்களை கொண்டுவருவதற்கான ஏற்பாடு அரசமைப்பில் காணப்படுகின்றது. மேலும் எங்களது அறிக்கையில் யுத்தகுற்றங்கள் தொடர்பாக விசாரணைசெய்வதற்கு விசேட உயர் நீதிமனறம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என நாங்கள் பரிந்துரை செய்துள்ளோம்.

இதேவேளை அவரது ஆணைக்குழு கலப்பு நீதிமன்றத்தினை உருவாக்குவது குறித்து பரிந்துரை செய்துள்ளதா என கேட்டதற்கு மக்ஸ்வெல் பரணகம, அது ஒரு அரசியல் விவகாரம் நாட்டின் அரசியல் தலைமையே அது குறித்து தீர்மானிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து நாங்கள் தலையிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பரணகம அறிக்கை யுத்தத்தின் இறுதி தருணங்களில் பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் 40 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என தருஸ்மன் அறிக்கையில் தெரிவிக்கப்



பட்டுள்ளதை நிராகரித்துள்ளது.

வெளிநாட்டு முகவர் அமைப்புகளின் அறிகையை ஆராய்ந்தோம், வீடுவீடாக அதிகாரிகள் கணக்கெடுப்பை மேற்கொண்டனர் , இதன்போது சுமார் 7ஆயிரம் பேரே கொல்லப்பட்டிருக்கலாம் என தெரியவந்துள்ளது,

இந்த எண்ணிக்கை குறித்து எங்களால் உறுதியாக தெரிவிக்கமுடியாது,ஆனால் 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை என நாங்கள் நம்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# தந்தையை கொன்று புதைத்த மகன்!

(கொழும்பு)

தனது தந்தையை கொலை செய்து புதைத்ததாக கூறப்படும் மகன் ஒருவர் கலவான, தேல்கோட பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் சகோதரரால் கலவான பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய அவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 3-ம் திகதி தந்தையைக் கொன்று வீட்டுக்கு பின்னால் புதைத்ததாக சந்தேக நபர தனது சகோதரரிடம் குறிப்பிட்டுள்ளார்.

குடித்து விட்டு தந்தையுடன் மோதலில் ஈடுபட்டமையினாலேயேதான் கொலை செய்ததாக சந்தேகநபர் கூறியுள்ளார்.

சந்தேக நபர் குடிபோதையில் இருந்த சந்தர்ப்பத்திலே இதனை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கலவான பொலிஸார் மேற்கொண்டுள்ள நிலையில் இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் இது தொடர்பில் அறிவித்த பின்னர் கொல்லப்பட்ட தந்தையின் சடலத்தை தோண்டி எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# பாராளுமன்ற அமர்வுக்கான ஒருநாள் செலவு 46 இலட்சம்

## சபாநாயகர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இடையூறுகளை ஏற்படுத்தி பாராளுமன்ற செயற்பாடுகளை குழப்பியடிப்பதற்கு முயலவேண்டாம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவுக்கு அறிவுரை வழங்கிய சபாநாயகர் கரு ஜயசூரிய, நாள் ஒன்றின் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளுக்கென 46 இலட்சம் ரூபா செலவிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தின் நேற்று முன்தினம் அமர்வின் போது நிதி அமைச்சினால் கொண்டுவரப்பட்ட விசேட வியாபார பண்ட் அறவீட்டுச்சட்டத்தின் கீழான 17 கட்டளைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்து விவாதம் நடத்துவதற்கு சபாநாயகர் கரு ஜயசூரிய அனுமதி வழங்கினார். சபாநாயகரினால் அனுமதி வழங்கப்பட்டதையடுத்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சபாநாயகரின் அனுமதியை சவாலுக்குட்படுத்தினார்.

குறித்த விடயமானது கட்டளைகளே தவிர சட்டமூலம் அல்ல. எனினும் சட்டமூலம் கொண்டு வரப்படுவதாகவே சபாநாயகரால் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. ஆனாலும் தற்போது கட்டளைகளே முன்வைக்கப்படுகின்றன. இவ்விடயமானது பில்லியன் கணக்கிலான ரூபாய்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இது தொடர்பில் முன்னரே பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் சட்டத்தின் பிரகாரமே கட்டளைகள் முன்வைக்கப்படுகின்றன. இதில் எந்த ஒளிவுமறைவும் கிடையாது. எனவே இடையூறு விளைவிக்காது சபை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இடமளியுங்கள் என்றார். எனினும் தினேஷ் குணவர்தன எம்.பி. சபாநாயகருடன முரண்பட்டு ஆவேசமாக கூச்சலிட்டார். இவருடன் உறுப்பினர் சரத் அமுனுகம, பந்துல குணவர்த்தன ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

இதேவேளை அனுரகுமார எம்.பி.யும் இதுகுறித்து விளக்கமளித்தார். தினேஷ் குணவர்த்தன எம்.பி. ஆவேசமாக பேசிய



தையடுத்து கருத்து வெளியிட்ட சபாநாயகர் அச்சுறுத்தல்களை விடுத்து இங்கு சாதிக்க முயற்சிக்க வேண்டாம். நிதி விவகாரமானது நன்கு ஆராயப்பட்டு முன்வைக்கப்படுகிறது.

இதில் எந்தத் தவறும் கிடையாது. ஆரம்பம் முதலே தினேஷ் குணவர்த்தன எம்.பி. சபை நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருந்து வருகிறார். பாராளுமன்றத்தின் நாள் ஒன்றுக்கான செலவு 46 இலட்சமாகும். எனவே இடையூறுகளை ஏற்படுத்தி சபை நடவடிக்கைகளை குழப்பியடிக்க முற்பட வேண்டாம் என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐ.நா விசாரணை...

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மைய வாரங்களில் எனது பணியகம் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் தொடர்பான வரலாற்று ரீதியான ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்கு அமைய ஆயுதப் போரில் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனது ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் இலங்கை, மத்திய ஆபிரிக்க குடியரசு, பலஸ்தீனம் தொடர்பான விசாரணைக் குழுக்கள், உண்மை கண்டறியும் குழுக்களுக்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் ஆதரவளித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

## சிங்கள இராஜ்ஜியம்...

எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை தொடர்பான ஐ.நா. அறிக்கை மற்றும் அமெரிக்க தீர்மானம் தொடர்பிலான விவாதத்தில் உரையாற்றும் போதே மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, கடந்த சில நாட்களுக்கு முன் விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன போன்றவர்கள் உட்பட இடதுசாரிகள் இணைந்து நடத்திய பொதுக் கூட்டமொன்றில், தனிச்சிங்கள தேசத்தை உருவாக்குவோம் எனவும், அதற்காக சிங்கள கொடிகளுடன் அணிதிரள்வோம் எனக் கூறியிருந்தனர்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலே மாவை சேனாதிராஜாவின் கருத்து அமையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அரசியல் கைதிகள்...

டன் நேரடி தொடர்புடையவர்கள் தண்டிக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னுரிமை அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வழக்குத் தொடரப்படும்.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் பயங்கரவாத குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, கைது செய்யப்பட்ட சுமார் 12000 புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளதாகவும் சொற்ப அளவிலான உறுப்பினர்களே இன்னமும் எஞ்சியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## வெளிநாட்டு...

யாவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான நீதிமன்ற செயற்பாடுகளையும் அதில் தனது அனுபவங்களையும் ஜப்பானிய நீதிபதி மோட்டூ நுகுசி, மகிந்த ராஜபக்ஷவுடன் பகிர்ந்து கொண்டார்.

அப்போது போர்க்குற்றங்கள் தொடர்பாக கம்போடியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வித்தியாசம் தொடர்பாக மோட்டூ நுகுசிக்கு மகிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்தியுள்ளார்.

இலங்கையில் மிகமோசமான பயங்கரவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோல்வியடையச் செய்தமையின் ஊடாக அனைத்து இனத்தவர்களுக்குமிடையில் ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடிந்ததாக மகிந்த ராஜபக்ஷ இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

முன்னைய அரசாங்கத்தினால் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் நியமிக்கப்பட்ட காணாமல்போனோர் குறித்த விசாரணை ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க தன்னை அழைத்தமைக்கு மோட்டூ நுகுசி இதன்போது நன்றி தெரிவித்தார்.

இதுகுறித்து மகிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்துகையில், மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அனைத்துலக போர்ச்சட்டங்கள் தொடர்பிலான ஆலோசனைகளை வழங்குவதற்கு மாத்திரமே வெளிநாட்டு மனித உரிமை தொடர்பிலான நிபுணர்களை இலங்கைக்கு அழைத்தேன்.

கருத்துப் பரிமாறலுக்கு அப்பால் அந்த நிபுணர்களினால் இங்கே எதனையும் செய்ய இயலாது.

இராணுவம் அல்லது வேறு குடிமக்கள் தொடர்பாக நீதிமன்ற ரீதியான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அனைத்துலக நிபுணர்களுக்கு அதிகாரமில்லை.

அவ்வாறு அனைத்துலக நிபுணர்கள் இலங்கைக்கு வருகை தருவது இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயல். இத்தகைய செயலை எமது நாட்டு மக்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு, ஜப்பானிய நீதிபதி மோட்டூ நுகுசி, இலங்கையின் பிரச்சினைக்கு உள்ளக நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாக இலகுவாக தீர்வு காண முடியும். அதுவே உகந்த செயற்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பரணகம...

கம ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகள் பாரதூரமானதாக அமைந்துள்ளன என்று அமைச்சரவை பிரதிப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பரணமக ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு எல்லோரும் கோஷம் எழுப்பி வந்தனர். பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைகளையும் தாண்டிய விசாரணைகளை பரணகம ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இறுதிப் போரில் விடுதலைப் புலிகள் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தமை, இசைப்பிரியா, புலித்தேவன், சார்ள்ஸ் அன்ரனி உள்ளிட்டவர்களின் மரணங்களுக்கு முறையான விசாரணை தேவை, சனல் 4 தொலைக்காட்சியின் காணொளிகள் நம்பகத் தன்மையுடையது, உண்மைகளைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட சர்வதேச நீதிபதிகளின் ஒத்துழைப்பு அவசியம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை பரணம ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது. சர்வதேச விசாரணை, கலப்பு விசாரணை என்பவற்றிலிருந்து நாங்கள் உள்ளக தேசிய விசாரணைக்கு வந்துள்ளோம். ஐ.நா. தீர்மானத்தில் 20ஆவது பந்தியில் இலங்கையின் இணக்கப்பாட்டுடனேயே சர்வதேச விசாரணையாளர்கள் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி நியமித்த பரணகம ஆணைக்குழு நேரடியாக சர்வதேச மத்தியஸ்தத்தைக் கோரியுள்ளது. ஐ.நா. தீர்மானத்தையும் தாண்டிய பாராதூரமான விடயங்கள் பரணகம ஆணைக்குழுவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது என்றார். (எ-11)

## எழுத்துமூலமான...

தீர்மானம் தொடர்பில் தங்களது நிலைப்பாட்டை எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளார்.

நேற்று நடைபெற்ற கட்சிப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்திற்கு மாற்றுக் கருத்துக்கள், வித்தியாசமான யோசனைகள் மற்றும் விமர்சனங்கள் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விடவும் இம்முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சாதகமான வகையில் அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மீளவும் பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உறுதியளித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்பினரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்மானத்தை அரசாங்கம் நிராகரிக்க வேண்டுமென சில தரப்பினர் ஊடகங்களில் கருத்து வெளியிட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற ரீதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைகளை எதிர்நோக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-12)

## ஜெனிவா அறிக்கை...

இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் கடும் கூச்சல் எழுந்தது. சுவாமிநாதனுக்கு முன்னதாக விமல் வீரவன்ச உரையாற்ற அனுமதிக்குமாறு அவர்கள் கூச்சலிட்டார்கள்.

எனினும் தனக்கு வழங்கப்பட்டுள்ள பட்டியலின் பிரகாரமே ஒவ்வொருவரையும் உரையாற்ற அனுமதிக்க முடியும் என்று முஜிபுர் ரஹ்மான் தெரிவித்ததையடுத்து, சபையில் கடும் அமளி ஏற்பட்டது.

இந்த அமளிக்கிடையே நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சபையிலிருந்து செங்கோலைத் தூக்கிக் கொண்டு ஓட முற்பட்டார். இது ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பெரும் அமளிதுமளி ஏற்படக் காரணமாக அமைந்ததுடன் சபை நடவடிக்கைகளும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் துணைப் படைக்கலச் சேவிதர் தினேஷ் குணவர்த்தன் கையில் இருந்து செங்கோலை மீட்டெடுத்த பின்னர் நாடாளுமன்ற அமர்வு மீண்டும் ஆரம்பமானது.

இதன் பின்னர் உரையாற்றும் வாய்ப்பு விமல் வீரவன்சவுக்கு வழங்கப்பட்டது. (எ-11)

## ஐ.நா...

வும் விமல் வீரவன்ச எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இலங்கை தொடர்பான ஐ.நா அறிக்கை மற்றும் ஜெனிவா தீர்மானம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே விமல் வீரவன்ச எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில் யுத்தத்தை வெற்றி கொண்ட எமது படையினர் மீது போர்க் குற்றம் சுமத்துவதற்காகவே விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மகிந்த சமரவீர உட்பட இந்த அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதற்காக அதனை அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ள நாம் தயாராக இல்லை.

ஆதலால் இந்த ஜெனிவா தீர்மானத்தை ஏற்க வேண்டுமா? இல்லையா? என்பது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

ஜனவரி 8 ஆம் திகதியும் ஒகஸ்ட் 17 ஆம் திகதியும் வெற்றி பெற்ற நீங்கள் முடிந்தால் இந்த சர்வஜன வாக்கெடுப்பிலும் வெற்றி பெற்று விசாரணைகளை நடத்துங்கள் என்றார். (எ-


சாரதிகள் தேவை

நடமாடும் பாண் விற்பனை வாகனம் ஓடக்கூடிய நன்கு அனுபவமுள்ள 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேவை. (2141)

0776747277

புதிய பிரிவுகள் ஆரம்பம்

★ வடக்கு மாகாண பொதுச்சேவை அலுவலக பணியாளர் தரம் -111

★ வடக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் சேவை தரம் -111

பிரிவு - I சனி, ஞாயிறு 9.00 AM
II சனி, ஞாயிறு 3.00 PM
III திங்கள், வெள்ளி 4.00 PM

G.A.Q - B.A(யாழ்,பேராதனை) விரிவுரைகள் வகுப்புக்கள் ஆரம்பம் - 24.10.2015, சனி,9 A.M

மேலதிக தொடர்புகள் - 077217006

ஐடியல் கல்லூரி - மானிப்பாய்
கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி (2139)

மகாஜனன்களின் ஒன்றுகூடல்

இடம் :- துரையப்பா பிள்ளை மண்டபம்
காலம் :- 25.10.2015 (ஞாயிறு)
நேரம் :- மாலை 4.00 மணி

குறிப்பு :- 1) நுழைவுச் சீட்டுக்களில் நேரம் மாலை 5.00 மணி என குறிப்பிடப்பட்டுள்ள போதும் நேரத் தேவை கருதி மாலை 4.00 மணிக்கே நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

2) அனைவரும் நுழைவுச் சீட்டுக்களுடன் வருகை தந்து ஒத்துழைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

3) நேரச் சுருக்கம் கருதி கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பான தமது கருத்துக்களை முன்வைக்க விரும்புபவர்கள் அன்றைய தினம் எழுத்துமூலம் அதனை செயலாளரிடம் சமர்ப்பிக்கலாம்.

"மகாஜனன்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்" (2136)

பழைய மாணவர் சங்கம்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை.

அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற !!!
அலட்சியம் வேண்டாம் நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்




இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம். இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு குடும்பத்துடன் விண்ணப்பிப்பவர்கள் 2 தடவை விண்ணப்பிக்கலாம்(இரட்டிப்பு வாய்ப்பு)

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

எமது அலுவலகங்களுக்கு நேரில் வந்து விண்ணப்பிப்பவர்களுக்கு உடனடியாகவே உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்படும்.

இன்னும் 7 நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன.
இறுதி சந்தர்ப்பம் - உடனே விரையுங்கள்

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட இரவு 8 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம். 49A,சப்பல் லேன், 0768226241

கிளிநொச்சி -A9 வீதி, 0768226240

நெல்லியடி. 0776699892

வல்வெட்டித்துறை. யாழ் வீதி,வல்வெட்டி, 0776697960

V2 TRAVELS

UK/CANADA/EUROPE போன்ற அனைத்து நாடுகளுக்குமான VISIT VISA/ SPOUSE VISA / TOURIST VISA / STUDENT VISA / BUSINESS VISA போன்றவற்றிற்கான ஆலோசனைகள்,ஆவணத்தயார்ப்படுத்தல்கள் ONLINE விண்ணப்ப படிவங்கள் நிரப்புதல் மற்றும் நிராகரிக்கப்பட்ட விசாக்களுக்கு சட்டநிபுணர்களின் உதவியுடன் Appeal செய்துகொடுத்தல்

பயண திகதியினை மாற்றுதல் (Date change)

வீசா எடுப்பதற்கான மாதிரி பயணச்சீட்டு (Travel Itinerary)

இந்தியா, மலேசியா விசாக்கள் (Visa Services)

விமானஆசனத்தினை பதிவு செய்தல்(Advanced Free Booking)

வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு (Srilankan Visa extension)

பயணக்காப்புறுதி (Travel Insurance)

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு

(அ-2528)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org